

# இயேசுவின்
# வருகையின்
# அடையாளங்கள்

பாஸ்டர் A.கிறிஸ்டோபர்

# இயேசுவின்
## வருகையின்
## அடையாளங்கள்

ஆசிரியர்
REV.DR.A. கிறிஸ்டோபர்

வெளியிடுவோர்
விண்ணக அப்பம்
நேருவீதி, சூரம்பட்டி,
ஈரோடு – 9.



RE-EDITION - JUNE 2011
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 57

FOR DETAILS CONTACT
WINNAGA APPAM
No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,
ERODE - 638 009. S.INDIA.
PHONE/ Fax : (0424) 2277286
e-mail : erodeipa@yahoo.com
website : www.erodeipa.org
Bank A/c : ALEX DHINAKARAN.C
Bank of India (Erode Branch)
A/c No : 820210100005638

# அணிந்துரை

திருமறைப் பெரியார்
மறைதிரு. யோபு ஞானப்பிரகாசம்,
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோயம்புத்தூர் – 12.

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. அதி சீக்கிரமாய் நிகழப் போகும் அன்பரின் வருகைக்காக ஆயத்தப்பட வேண்டியது அவசியமும், அவசரமுமாய் இருக்கிறது.

இந்நூலின் ஆசிரியர் டாக்டர் அ.கிறிஸ்டோபர் அவர்களுக்காய் கர்த்தரை துதிக்கிறேன். எங்களின் ஸ்தாபனத்தின் மூத்த போதகர்களில் ஒருவரும் ஈரோடு மண்டல கண்காணிப்பாளருமாகிய இவர் சிறந்த பேச்சாளரும், எழுத்தாளரும், வேதாகம விரிவுரையாளருமாவார்.

தான் சொல்ல வந்த கருத்தினை தனது வாசகர்களின் மனதில் வெகு ஆழமாக பதிவு செய்ய இவர் கையாளுகிற யுக்திகள் மிக சிறப்பானவைகள். சில இடங்களில் தூயத் தமிழ் துள்ளிவிளையாடும். சில இடங்களில் வட்டார வழக்குகள் வந்து வந்து போகும். எப்படிப்பட்ட கருத்தினையும் எளிதாக புரிய வைக்கும் எழுத்து நடையின் சொந்தக்காரர் இவர்.

கடைசி கால சம்பவங்கள் குறித்து கைக்கு அடக்கமான பல நூல்களை எழுதிய இவர், கர்த்தரின் வருகைக்கான அடையாளங்களின் நிறைவேறுதலை கவனமாகப் பதிவு செய்திருக்கிறார். அறிவியல் நிகழ்வுகளையும், அகில உலக அரசியலில் ஏற்பட்டிருக்கிற நிகழ்வுகளையும், இப்புத்தகம் அச்சு ஏறுகிறவரை துள்ளியமாக பதிவு செய்திருக்கிறார்.

இந்நூல் மூலம் விளக்கம் பெற்று, விவேகம் அடைந்து, விழிப்பாய் அவர் வருகைக்காய் காத்திருக்க விண்ணவர் இயேசு அருள்புரிவாராக.

**– ஆமென்.**



# படைக்கிறேன்

என்னில் ஜீவன் பிறந்திடவே !
மண்ணில் மனுவாய் பிறந்தவரே !
என்னில் கிருபை நிலைத்திடவே !
கண்ணின் மனியாய் காப்பவரே !

விண்ணில் என்னை சேர்த்திடவே !
உம்மில் நாளும் வளரசெய்தீர் !
எண்ணில் அடங்கா கிருபைதந்தீர் !
பண்ணில் உம்மை துதிக்கவைத்தீர்.

நீர்வரும் வேளையை சரியாய் அறிந்து !
நீர்வளம் பெற்றநல் சபையாய் வளர்ந்து !
நித்திய ஜீவனை நின்ஜனம் பெற்றிட !
நின் ஆசியால் இந்நூலை நிறைத்திடுவீர்.

இலக்கியப்பணியில்,
**அ.கிறிஸ்டோபர்.**

## என்னுரை

என் இனிய வாசகர்களே! அதிசீக்கிரமாய் வரப் போகிற இரட்சகரின் நாமத்தில் வாழ்த்துக்கள். சகல சிருஷ்டியும் காத்து தவிக்கிற – எதிர் பார்க்கிற கர்த்தருடைய வருகை அதிசீக்கிரமாய் இருக்கிறது.

உங்கள் கண்களை உலக நாடுகள் பக்கம் சுழலவிட்டுப் பாருங்கள். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாட்டில் ஆட்சி மாற்றங்கள். ஆட்சியாளருக்கு தடுமாற்றங்கள். நாட்டுக்கு விரோதமாக நாடு, உள்நாட்டுக்குள்ளேயே ஜாதிக்கு விரோதமாய் ஜாதி எழும்புதல் மட்டுமல்ல, தீவிரவாத இயக்கங்களின் தீர்க்கமுடியாத அழிவுச் செயல்கள் இவைகளெல்லாம் கிறிஸ்துவின் வருகையை நமக்கு எச்சரிப்பின் மணியடிக்கிறது.

அது மட்டுமா முன் எப்போதும் நிகழாத வகையில் ஏற்படுகிற பூமியதிர்ச்சிகள், ஆழிப்பேரலைகள், அணு ஆயுத பேராயுதங்கள் போன்றவைகள் கர்த்தர் வருகிறார் என்று வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

இது ஒருபுறமிருக்க துர்உபதேசக் காற்று, விசுவாசத் துரோகம், பொய்த் தீர்க்கதரிசனம் என்று சபையைச் சீரழிக்கும் ஏகப்பட்ட எதிர்வினைகள் எழும்பியுள்ளன.

சத்தியத்தை கைக்கொள்ளுகிற உத்தமக் கூட்டம் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்பட கரிசனையோடு இஃதினை எழுதுகிறேன். வாசியுங்கள், யோசியுங்கள், பரிசுத்தத்தில் வளருங்கள், விழித்திருந்து ஜெபியுங்கள்.

அன்புடன்
அவர் சேவையில்,
அ.கிறிஸ்டோபர்.



## அதிகாரங்கள்

1. அன்பரின் வருகை ஓர் அறிமுகம்
2. அறிவியல் பெருக்கமும் ஆராய்ச்சிகளும்
3. உலகம் உணர்த்தும் உண்மைகள்
4. இஸ்ரவேல் என்னும் அத்திமரம்
5. பத்து விரல் இராஜ்ஜியம்

## 1

# அன்பரின் வருகை ஓர் அறிமுகம்

என் இனிய வாசகர்களே! நம்பிக்கையின் தேவன் உங்களோடு இருப்பாராக! இயேசு கிறிஸ்து திரும்ப இந்த உலகத்திற்கு வரப்போகிறார் என்பது நம்முடைய பெரிய நம்பிக்கை. இந்த நம்பிக்கை பாரம்பரிய போதனையினால் நமக்கு ஏற்பட்டதல்ல. பரிசுத்த வேதாகமம் அழுத்தமாக போதிக்கிற மிகப்பெரிய உன்னதமான சத்தியம் இது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மனித சாயலாய் மண்ணில் அவதரித்த அவர், இன்னும் கொஞ்சம் காலத்தில் மகிமையின் சாயலோடு மகா ராஜனாய் வரப்போகிறார் என்பது மறுக்கமுடியாத மகிமையான சத்தியம்.

இயேசுவின் வருகை என்பது நானோ அல்லது திருச்சபையைச் சார்ந்தவர்களோ கண்டுபிடித்த திடீர் உபதேசம் அல்ல.

கிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட காலத்திலேயே இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனம் உரைத்தலும் உதயமாயிற்று.

நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து இயேசு, ‘‘நான் போய் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிய பின்பு திரும்ப உங்களிடத்திற்கு வருவேன்’’ என்று (யோவா 14 : 3) போதித்ததுமல்லாமல், ‘‘இதோ சீக்கிரமாய் வருகிறேன்’’ என்று உயிர்த்தெழுந்து உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இயேசுவின் சீஷர்கள் அதிக ஆவலுள்ளவர்களாக இந்த



வருகையை எதிர்பார்த்தார்கள். ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள், ஏராளமான கேள்விகள், என்னவெல்லாம் நடக்குமோ என்ற வியப்புகள், வாஞ்சையை அடக்கமுடியாமல் வாய்விட்டே கேட்டு விட்டார்கள்.

‘‘உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?’’ எங்களுக்குச் சொல்ல வேண்டும். (மத் 24 : 3) இதுதான் அவர்கள் கேட்ட கேள்வி : இங்கே இரண்டு விதமான காரியங்களை சீஷர்கள் அறிந்து கொள்ள அதிக அக்கரையுள்ளவர்களாய் இருந்தார்கள் என்பது புலப்படுகிறது.

முதலாவது **இயேசுவின் வருகை**

இரண்டாவது **இந்த உலகத்தின் முடிவு**

இந்த இரண்டு கேள்விகளுக்கும், விடையளிக்கும் விதத்தில் நேரடியாகவும், உவமையாகவும் அடுத்து வரும் வசனங்களிலும் அதிகாரங்களிலும் அன்பர் இயேசு அடுக்கடுக்காய் அடையாளங்களை எடுத்துரைக்கிறார். அவைகளை நாம் ஆராய்ந்து பார்க்குதல் அவசியம்.

நாம் கடைசிக்காலத்தில் நின்று கொண்டு இருக்கிறோம். இன்னும் அழுத்தமாக சொல்ல வேண்டுமென்றால் கடைசி நாளில், கடைசி மணியில், கடைசி நிமிடத்தை நெருங்கி விட்டோம் என்பதுதான் உண்மை.

அக்கம் பக்கம் பார்ப்பதற்கும், அசதியாய் வாழ்வதற்கும் ஆசைப்பட்டதை அனுபவிப்பதற்கும் இது காலமல்ல. அழைப்பைப் பெற்றவர்கள், ஆவியைப் பெற்றவர்கள், அழியா இராஜ்யத்தை சுதந்தரிக்க அவசரமாய் ஆயத்தப்பட வேண்டிய காலம் இதுதான் என்கிற அங்கலாய்ப்பு எனக்குள் அலையென பொங்கி எழும்புகிறது. அதன் விளைவே இந்தப் புத்தகம், அவரின் வருகையை அறிந்து கொள்ள அடையாளங்களை அடிக்கோடிட்டுக் காட்டும், அத்தாட்சிப் பெட்டகம் இது.

நான் இதற்கு முன்னே இயேசுவின் வருகை எங்கே? இரகசிய வருகை, அந்திக்கிறிஸ்து, ஆயிர வருட அரசாட்சி என்று கடைசிக்கால சத்தியங்கள் அடங்கிய பல புத்தகங்களை எழுதியிருந்தாலும், அவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நோக்கத்தோடு இந்த புத்தகத்தை எழுதுகிறேன் என்பது உண்மை.

ஆம்! முந்தின புத்தகங்கள், கர்த்தருடைய வருகையைக் குறித்த **அறிவை** உங்களுக்கு உண்டாக்க எழுதினது. ஆனால் இந்த புத்தகத்தையோ கர்த்தருடைய வருகையைக் குறித்த **ஆயத்தத்தை** உங்களுக்குள் உண்டாக்கவே இஃதினை எழுதுகிறேன்.

நம்முடைய ஆதிச்சபைப் பிதாக்களாகிய அப்போஸ்தலர் கள் கிறிஸ்துவின் வருகையை அதிகமாய் விசுவாசித்தது மாத்திரமல்ல தங்களின் காலத்திலேயே இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள், மட்டுமல்ல இருக்கக் கூடாதா என்று ஏங்கினர்.

அப்போஸ்தலனாகிய பவுல், ''இதோ ஒரு ரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவ தில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்'' (1 கொரி 15 : 51) என்றும்,

1 தெசலோனிக்கேயரில், பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் (1 தெச 4 : 17) என்று எழுதியிருப்பதிலிருந்து ஆதி சபையிலிருந்த நம்முடைய முற்பிதாக்கள் அவர்களின் காலத்திலேயே ஆண்டவரின் வருகை இருக்கும் என்பதை எதிர்பார்த்தார்கள் என்பது தெளிவாகப் புரிகிறதல்லவா?



ஆனால் நடைமுறைப் பிரச்சினை என்ன தெரியுமா? அவர் வருகிறார் என்ற சத்தியம் கேட்டுக் கேட்டு பலருக்குப் புளித்துப் போய்விட்டது, சிலருக்கு சலித்துப் போய்விட்டது. எனக்குத் தெரிந்து என் போதகரின் போதகர் வருகையைக் குறித்து போதித்தார். என் போதகர் பிரசங்கித்தார். நான் கடந்த 25 வருடமாக பிரசங்கிக்கிறேன். இப்பொழுது என் மகனும் பிரசங்கிக்கிறார். எல்லோருக்கும் ஒரே வசனம்தான் கையில் இருக்கிறது.

இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன். யாம்ப்பா! நாலுத்தலைமுறையாய் இதைத்தான் பிரசங்கிக்கிறீர்கள், இயேசுநாதர் தான் வந்த பாடில்லை என்று நகைக்கிறார்கள், நக்கலடிக்கிறார்கள்.

இதற்காகவெல்லாம் இயேசுகிறிஸ்து **தொப்பென்று** குதிக்கப் போவதுமில்லை, **கப்பென்று** அமைதலாக இருந்துவிடப் போவதுமில்லை. அவர் வரப்போகிறார் – வரத்தான் போகிறார்.

இப்படிப்பட்ட ஏளனங்கள் இன்று, நேற்று முளைத்தது அல்ல, முதலாம் நூற்றாண்டிலேயே முளைத்துவிட்டது என்பதை பேதுருவின் நிரூபத்தில் காண்கிறோம்.

''அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? (II பேதுரு 3 : 4) என்றும்'', தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் (II பேது 3 : 9) என்றும் பதிவு செய்திருப்பதின்மூலம் ஆதித் திருச்சபையிலேயே அவர் வருகையைக் குறித்து தர்க்கம் செய்தவர்கள் இருந்தார்கள் என்பது தெளிவாகிறதல்லவா!

ஆனால் நீங்கள் ஒன்றை அறிய வேண்டும் இயேசுவின் வருகை என்பது உண்மையான சத்தியம், நடக்கப் போகிற மெய்யான அனுபவம் என்பது மாத்திரம் வேதம் குறிப்பிடுகிற அசைக்க முடியாத உபதேசமாகும்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு திரும்ப வருவதற்கு முன்பாக உலகத்தில் பல்வேறு விதமான நிகழ்வுகள் நடக்கும் என்றும், அவைகளே அவர் வருகைக்கு அடையாளம் என்றும், இயேசு சொல்லியிருப்பதினால் உலக நடக்கைகளையும் தீர்க்கதரிசன நிறைவேறுதல்களையும் உற்று நோக்க வேண்டியது நமது கடமையாகும்.

இயேசு கிறிஸ்து வரும் நாளையாகிலும் நாழிகை யாகிலும் நம்மால் அறிந்து கொள்ள முடியாது என்று புலம்புவது தேவையில்லாத அலட்சியப் போக்கு ஆகும். நாளையும், நாழிகையும் அறிய முடியாதே தவிர, எனது வருகை சமீபம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள் என்று இயேசு சொன்னதை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

உங்களுக்கு புரிய வேண்டும் என்பதற்காக இஃதினை எழுதுகிறேன். ஒரு பெண் கர்ப்பவதியானால் என்றைக்கு, எத்தனை மணிக்கு குழந்தை பிறக்கும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது என்பது உண்மையானாலும், குறிப்பிட்ட இந்தக் காலக்கட்டத்திலாகிலும் பிறக்கும் என்று யோசித்து திட்டமிட்டு ஆயத்தப்படுகிறோமே! கர்த்தரின் வருகையைக் குறித்த நாளும், நாழிகையும் தெரியாவிட்டால் என்ன? அவருடைய வருகை சமீபம் என்ற உணர்வு கூடவா நமக்கு உண்டாகாது! எச்சரிக்கையாய் இருங்கள், எதிர்பார்ப்போடு இருங்கள் என்று மீண்டும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

பழைய தமிழ் பாடலொன்று நினைவுக்கு வருகிறது, ''ஆற்று நண்டு சேற்றைக் குழைத்து தன் வலையை அடைத்து



விடுமாம்'', என்ன ஆச்சரியம் உடனே மழை வரும். அதாவது மின்னல் அடிக்கும் பொழுதே சீதோஷ்ண மாற்றத்தை உணர்ந்து மழை வரப்போகிறது என்பதையறிந்து நண்டு தன் வலையை அடைத்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுமாம்.

நீங்கள் நண்டைவிட விசேஷித்தவர்கள் அல்லவா? ஞானமுள்ளவர்கள் அல்லவா? விவரமுள்ளவர்கள் அல்லவா? விவேகமுள்ளவர்கள் அல்லவா? உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது? என்பதை உற்றுப்பார்க்க வேண்டாமா? திருமறையில் சொல்லப்பட்ட அடையாளங்கள் அரங்கேறு கிறதா என்று ஆராய வேண்டாமா? அவரின் வருகைக்கு ஆயத்தப்பட அர்ப்பணம் செய்ய வேண்டாமா? என்ற ஆதங்கக் கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

அவர் வருவது ஒருபுறம் இருக்கட்டும். அதை தடுத்தாலும் நிற்கப் போவதில்லை. ஆனால் அவர் இரண்டாம் விசை இந்த உலகத்திற்கு மகா ராஜாவாய் வருவதற்கு முன்பு ஒரு முக்கிய நிகழ்வு இந்த உலகத்தில் நடக்கப் போகிறது. அதைக் குறித்து நீங்கள் அறிவீர்களா? அறிந்திருப்பீர்களானால் ஆயத்தமாக இருக்கிறீர்களா?

அவர் பூவுலகில் கால் பதிப்பதற்கு முன்பாக ஒரு கூட்டம் மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படும். அதாவது ஒருக்கூட்டம் மக்கள் உயிரோடு மறுரூபமாக்கப் படுவார்கள். அவர்கள் மண்ணைவிட்டு விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகே அந்த மகிமையான பட்டாளத்துடன் திரும்ப இந்த உலகத்தில் இயேசு கால்பதிப்பார் என்று பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அடித்துச் சொல்லுகிறது.

''என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்''. (சக. 14 : 5)

.......அவர்களைக் கண்டிக்கிறதற்கும் ஆயிரமாயிரமான

தமது பரிசுத்தவான்களோடுங் கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். (யூதா 15) இந்த இரண்டு வசனங்கள் இந்த மகா சத்தியத்தை வெகு நேர்த்தியாக உறுதிப்படுத்துகிறது.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை மணவாளன் அல்லது மகாராஜன் என்ற இரண்டு அந்தஸ்தில் ஏதாவது ஒன்றில்தான் சந்திக்க முடியும். மணவாளனாக அவரைச் சந்திக்க வருபவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் மகாராஜனாக இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வரும்பொழுது அவரோடே இந்த உலகத்திற்கு வந்து ஆயிரம் வருடம் அரசாளுவார்கள்.

மணவாளனாக அவரைச் சந்திக்கும் வாய்ப்பை இழந்தவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள், காரணம் கடைசிக்காலத்தில் இவ்வுலகத்தை ஆட்சி புரிய வந்து ஆட்டிப் படைக்கப் போகிற அந்திக் கிறிஸ்துவினால் அல்லல்களை அனுபவிக்க வேண்டியது இருக்கும். அது உபத்திரவ காலம் என்று வேதம் சொல்லுகிறது.

ஆதித் திருச்சபைக்கு ரோமப் பேரரசு கொடுத்த உபத்திரவத்தைப்போலவே அந்திக் கிறிஸ்துவும் அட்வான்ஸ் டெக்னாலஜியோடு உபத்திரவத்தை இயேசுவின் நாமத்தை சொல்லுவோர் மீது அடைமழையைப் போல அனுப்புவான். அநேகர் இரத்த சாட்சியாய் மரிப்பார்கள். ஆகிலும் சிலர் ஆண்டவரை மறுதலித்து அந்திக் கிறிஸ்துவின் ஆதரவாளர்களாய் மாறிப் போவார்கள்.

அப்படியாவது நிம்மதியாக இருக்க முடியுமா? அதுதான் இல்லை. ஆண்டவரின் கோபக் கலசங்கள் பூமிமேல் ஊற்றப்படுகிறபொழுது மகா தத்தளிப்பு உண்டாகும். ஆக அங்கேயும் வேதனை, இங்கேயும் வேதனை. அப்படிப்போனாலும் வேதனை இப்படிப் போனாலும் வேதனை. அது சூளையைப் போல் வருகிற நாள், என்று வேதம்



சொல்லுகிறது. அந்த உபத்திரவத்தை, உக்கிரத்தை குறைக்க ஒருவனாலும் முடியாது.

நான் உங்களை பயப்படுத்துகிறேன் என்று நீங்கள் எண்ணிவிடாதீர்கள். பயத்தை தெளிவிக்கவே இஃதினை எழுதுகிறேன். கிறிஸ்து வரப்போகிற காலம் இதுதான் என்று அறிந்து, நீங்கள் ஆயத்தமாக இருப்பீர்கள் என்றால் கிறிஸ்து வரும்பொழுது நீங்கள் எடுத்துக்கொள்ளப்படுவீர்கள். ஆயத்தம் பெறாதவர்கள் மாத்திரமே கைவிடப்படுவார்கள்.

இயேசு வருகிற பொழுது **கிறிஸ்துவுக்குள்** மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், என்ற வசனத்தின் அடிப்படையில் தியானம் பண்ணினால் **கிறிஸ்துவுக்குள்** இருப்பவர்கள் மாத்திரமே மறுரூபப்படுவார்கள் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

இந்த **கிறிஸ்துவுக்குள்** என்ற வார்த்தைக்கு வரையறை கூறுவது என்பது சற்று சிக்கலான விஷயம் தான் இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு எடுத்துக் கொள்ளப் படுவதற்கான ஏகப்பட்ட உபதேசங்கள் எழும்பி இருக்கிறது. அவைகளெல்லாவற்றையும் சொல்லி, சாரி எழுதி உங்களை குழப்ப நான் விரும்பவில்லை.

எடுத்துக் கொள்ளப்படுவதற்கு மிகக்குறைந்த பட்ச தகுதிகளை மாத்திரம் உங்கள் முன்பாக வைக்க விரும்புகிறேன்.

1. மறுபிறப்பு என்கிற இரட்சிப்பு (யோவா 3 : 3)
2. உடன்படிக்கையாகிய ஞானஸ்நானம் (யோவா 3 : 5)
3. ஆவியினால் பிறத்தல் (யோவா 3 : 6)

பிரியமானவர்களே! பாவமன்னிப்பின் நிச்சயம் மாத்திரமல்ல பரிசுத்த ஆவியின் நிறைவும் நமக்கு அவசியம். மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற பரிசுத்தாவி என்றும் (எபே. 4 : 30) அந்த ஆவியினாலே சாவுக்கேதுவான

உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார் என்று ரோம 8 : 11 குறிப்பிட்டுள்ள வேத வசனங்களை ஆராய்ந்து பார்ப்பது மட்டுமல்லாமல் வெளிப்படுத்தல் 22 : 17ல் ''ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்'' என்ற வார்த்தையை சேர்த்து சிந்தித்தல் அவசியம்.

அப்பாடா! ஆல்ரைட்! ஆயத்தமாகிவிட்டேன் என்று எண்ணி விடாதீர்கள். எடுத்துக் கொள்ளப்படுவதற்கு இதெல்லாம் முதற்படிதான். அதற்கு அடுத்து ஒன்று இருக்கிறது, அது என்ன தெரியுமா? ''**பூரணமாகுதல்**. எபே 4 : 11ல் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும்.....'' என்று எழுதப்பட்டுள்ளதை கவனியுங்கள்.

கிறிஸ்துவுக்குள் பிறக்கிற குழந்தைகள் பூரணராக வேண்டியது அவசியம். பூரணமாகுவது எப்படி? என்று புதிய பாடத்திட்டத்தை இங்கு நான் எழுதப்போவதில்லை. திருமறையை திறந்த மனதோடு வாசியுங்கள், என்று மாத்திரம் உங்களுக்கு புத்தி சொல்ல விரும்புகிறேன்.

முக்காடு போட வேண்டுமா?

முழங்கால் போட வேண்டுமா?

நகை போடக் கூடாதா?

நட்டு போடக் கூடாதா?

என்று என்னைக் கேள்வி கேட்கக் கூடாது. இந்தக் கேள்விக்கெல்லாம் என்னிடத்தில் பதிலில்லை என்று எண்ணி விடாதீர்கள். ஆனால் அதைப்பற்றிய வாதம் இங்கு தேவையில்லை என்று நினைக்கிறேன்.

நான் ஒன்றை சொல்ல, குழந்தை (போன்ற) பொம்மை செய்ய நினைத்து, குரங்கு பொம்மை செய்த கதை ஆகிவிடும். வாக்கு வாதம் பிடிவாதமாகி, பக்கவாதமாக மாறுவதை விட பரிசுத்தமாவதையே நான் விரும்புகிறேன்.



பூரணமாவதற்கென்று குறிப்பிட்ட அளவு கோல் கிடையாது. ஒவ்வொரு திருச்சபைச் சார்ந்தவர்களும் ஒவ்வொரு விதமான உபதேச சட்டங்களை கடை பிடிக்கிறார்கள், நானும் ஒரு குறிப்பிட்ட சபையில் போதகன் என்ற முறையில் குறிப்பிட்ட உபதேசத்தை விசுவாசிக்கிறேன், அதைப் போதிக்கிறேன்.

ஆனால், அந்த உபதேசத்தை எனது வாசகர் மேல் திணிப்பதற்கு நான் விரும்பவில்லை. அதே சமயத்தில் எனது வாசகர் திசைகெட்டுப் போவதையும் நான் விரும்பவில்லை. நீங்கள் பூரணராக விரும்புகிறீர்களா? **குறைந்தபட்ச** வேத அனுபவங்களையாகிலும் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதோ இந்த வசனங்களை சற்று சிந்தித்துப் பாருங்கள். வேத வசனத்தை அப்படியே பதிவு செய்திருக்கிறேன்.

அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படா திருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?

கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக் கிறீர்களே.

ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப்பிரிந்து போய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும்,

குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். (II கொரி 6 : 14-18) இந்த வசனத்தை வாசித்து ஜெபித்து விடை காணுங்கள்.

தேவையில்லாத வாக்குவாதங்களை அப்பிரயோ ஜனமானவைகளை அறவே தள்ளிவிடுங்கள்.

மேலும் நம்முடைய பரிசுத்த வாழ்விற்கு அளவுகோல் திருமறைதான் என்றறிந்து தெளிவுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள். எதைப் புசிக்க வேண்டும், எதை உடுத்த வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்ற அட்டவணை நான் உங்களுக்குத்தரப் போவதில்லை.

அதற்குப் பதிலாக திருமறைக்கு நேராக உங்கள் கவனத்தை திருப்ப விரும்புகிறேன். கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவை களெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவை களெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தி யுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலி 4 : 8)

இந்த வசனங்களுக்கு உங்கள் மனச்சாட்சி சரியான பதிலைச் சொல்லுமானால் கண்டிப்பாக நீங்கள் பூரணமாகி விடுவீர்கள் என்பது திண்ணம்.

இந்த அறிமுகத்தோடு அவரின் வருகையைக் குறித்த அடையாளங்களை சுட்டிக்காட்டி அவைகளின் நிறைவேறுதல் களை விவரித்துச் சொல்லி விழிப்புணர்வு ஊட்ட விரும்புகிறேன்.

மத்தேயு 24ல் மிக நீண்டதொரு பட்டியலை இயேசுக்கிறிஸ்து அவரின் அடையாளமாக நமக்குத் தந்திருக்கிறார்.

★ பஞ்சங்கள்

★ நிலநடுக்கம் (பூமியதிர்ச்சி)



★ ஆழிப்பேரலைகள் (சமுத்திரக் கொந்தளிப்பு)

★ வானமண்டலத்தில் அதிசயங்கள்

★ சண்டைகள்

★ விசுவாசத்துரோகம்

★ கொள்ளை நோய்கள்

★ அத்திமரம் துளிர்விடுதல்

இவைகளையல்லாமல் கடைசிக்காலத்திற்கான அடையாளங்கள் என்று பழைய ஏற்பாட்டின் புத்தகங்களாகிய தானியேல், மீகா, போன்ற தீர்க்கதரிசன புத்தகங்களில் சொல்லியுள்ள அடையாளங்களாகிய

★ அறிவு பெருகுதல்

★ ஆராய்ச்சிப் பெருகுதல்

★ அதிவேக வாகனங்கள்

★ பத்துவிரல் இராஜ்யம்

ஆகியவற்றைக் குறித்து உங்களுக்கு விளக்கமாக இனிவரும் அத்தியாயங்களில் எழுத விரும்புகிறேன்.

## 2

# அறிவியல் பெருக்கமும் ஆராய்ச்சிகளும்

இஃது கடைசிக்காலம் என்பதற்கும் கர்த்தரின் வருகை சமீபம் என்பதற்கும் அடையாளமாக சொல்லப்பட்ட இந்த வசனங்களைக் கவனித்துப் பாருங்கள்........ அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் (தானி 12 : 4)

இரதங்கள் தெருக்களில் கடகடவென்றோடி,
வீதிகளில் இடசாரி வலசாரி வரும்; அவைகள்
தீவட்டிகளைப் போல விளங்கி, மின்னல்களைப்
போல வேகமாய்ப் பறக்கும் (நாகூம் 2 : 4)

இந்த இரண்டு வசனங்களை உற்று கவனித்தால் அறிவுப் பெருக்கம், ஆராய்ச்சிகளின் பெருக்கம் அதிவேகமான வாகனங்கள் எல்லாம் கடைசிக் காலத்தின் அடையாளங்கள் என்று புலனாகிறது.

ஆரம்ப காலத்தில் ஒரு இடம்விட்டு மறுஇடம் செல்ல மனிதன் மிருகங்களை வாகனங்களாகப் பயன்படுத்தினான். உருளும் சக்கரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு விலங்குகள் இழுத்துச் செல்லக் கூடிய வண்டிகளை மனிதன் பயன்படுத்தினான்.

மனிதனின் அறிவு விருத்தியடைந்தது. ஆராய்ச்சிமனம் அதிகரித்தது. அதன் விளைவு அதிநவீன அறிவியல் கண்டுபிடிப்புகள், உலகத்தில் உண்டாயிற்று. பத்தொன்பது நூற்றாண்டுகளாய் இல்லாத மிகப்பெரிய அறிவியல் வளர்ச்சி மற்றும் புரட்சி கி.பி. 20ஆம் நூற்றாண்டில் உண்டானதை நாம்



யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஆரம்பக் காலத்தில் ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தபொழுது, அதனோடே இணைக்கப் பட்ட டிராம் வண்டிகளில் பயணிக்க மக்கள் பயந்தார்கள். அவ்வளவு வேகம் போனால் செத்துப் போவோம் என மக்கள் நினைத்தார்கள். நிறைமாத கர்ப்பினியாகிய தன் மனைவியை அந்த வண்டியில் அமரவைத்து பயணித்து பார்ப்பவர்களின் பயத்தைப் போக்கினாராம்.

அப்பொழுது அந்த வண்டியின் வேகம் என்ன தெரியுமா? மணிக்கு 5 கி.மீ. சிரிக்காதீங்க அதுதான் உண்மை. ஆனால் இப்பொழுது மணிக்கு 500 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய இரயில் வண்டிகளெல்லாம் வந்து விட்டது.

இதைத்தான் நாகூம் தீர்க்கதரிசி ரதங்களைப் போல, மின்னல்களைப் போல, தீவட்டிகளைப் போல என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி அதிவேக வாகனங்களை மக்கள் கடைசிக் காலத்தில் பயன்படுத்துவார்கள் என்று அழுத்தமாக முன்னுரைத்திருக்கிறார்.

நீராவி எஞ்சின் டீசல் எஞ்சினாக வளர்ந்து மின்சார கண்டுபிடிப்புக்குப் பிறகு இன்னும் நவீனங்கள் புகுந்துவிட்டது. தரைவழி, தண்ணீர்வழி, என்ற எல்லையைத் தாண்டி வானில் பறக்க மனிதன் பழகிவிட்டான்.

இரவு சாப்பாடு சென்னையில், காலை காபி மலேசியாவில் என்று மக்கள் பறந்து கொண்டிருக்கிறார்கள். நம்ம ஊர்ல தண்ணி போட்டு கார் ஓட்டுகிறார்கள், ஜப்பானில் தண்ணீர் போட்டு ஓட்டுகிற காரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இனி பெட்ரோல் தேவையில்லை.

இது ஒரு புறம் இருக்க மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அநேக சமாச்சாரங்கள் உலகத்திற்குள் வந்தன.

வானொலி, ஒளிப்பதிவு, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநகல், என்று தகவல் பரிமாற ஏகப்பட்ட சாதனங்கள், மனிதனின் அறிவு அதி வேகத்தில் பெருகிவிட்டது.

கண்டுபிடிப்புகள் ஒரு எல்லைக்குள் நின்றுவிட வில்லை. எல்லாத் துறைகளிலும், புதிய புதிய வடிவத்தில் பரிணாமம் எடுத்து வருகிறது. அந்தக் காலத்தில் ஒளிப்பதிவு செய்கிற பெட்டி சினிமாப்படச்சுருள் போன்ற சுழலும் சுருள்நாடாவில் இருந்தது. அஃது முன்னேறி கையடக்க கேசட்டாக வந்தது. இப்பொழுது செல்போனிலேயே பதிவு செய்யக்கூடிய அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது.

தொலைபேசியை கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகாம் பெல் இப்பொழுது வந்து பார்த்தால் மண்டையை பிய்த்துக் கொள்வார். காரணம் கம்பி இணைப்பிலிருந்த தொலைபேசி கம்பியில்லா தொலைபேசியாய், கைப்பேசியாய், அலை பேசியாய் மாறிவிட்டது.

வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனி இப்பொழுது வந்தால் ஆடிப்போய் விடுவார், காரணம் மின்காந்த அலைகளைப் பயன்படுத்தி அவர் ஆரம்பித்து வைத்த ஒலிபரப்புச் சேவை நவீன மாற்றங்கள் பெற்று, அதிர்வலைகளை பண்பலைகளாக (FM) மாற்றி, பக்காவாக ஒலிபரப்பப் படுவதைப் பார்த்தால் பரவசப்பட்டுப் போவார்.

அதனைத் தொடர்ந்து தொலைக்காட்சி, வண்ணத் தொலைக்காட்சி இப்படி ஏகப்பட்ட கண்டுபிடிப்புகள்.

புகைப்படமும், சினிமாப் படமும் எப்படி மாறிவிட்டது. இப்பொழுதெல்லாம் படசுருள் இல்லாமல் (FILM) அழகான வண்ணப்படத்தை நொடிப்பொழுதில் எடுத்துவிட முடியும். எடுப்பது மாத்திரமல்ல அடுத்த நிமிடமே அதை அமெரிக்காவில் உள்ள உறவினருக்கு மின்னஞ்சல் செய்ய முடியும்.



அஞ்சல் துறையை எண்ணிப் பாருங்களேன், ஆதி காலத்தில் புறாவின் காலில் கட்டி அனுப்பினார்கள். அதற்கு பிறகு, அஞ்சல்துறை என்று ஒன்று வந்தது. தொலைபேசி இணைப்பில் கடிதங்கள் முறையில் அனுப்பப்பட்டது.

இப்பொழுது கம்ப்யூட்டர் யுகம், யாரும் கடிதம் எழுதுவதில்லை, E-mail மூலம் கடிதங்களை, காரியங்களை பரிமாறிக் கொள்கிறார்கள். ஆரம்பத்தில் இ-மெயில் மாத்திரம் இருந்தது, இப்பொழுது இ-டிக்கெட் முறையில் வீட்டிலிருந்து கொண்டே இரயில் டிக்கெட்டும், விமான டிக்கெட்டும் எடுக்க முடியும்.

இ-பேங்கிங் முறையில் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை வீட்டிலிருந்து கொண்டே கம்ப்யூட்டர் மூலம் இன்னொருவர் கணக்கிற்கு பணத்தை மாற்ற முடியும்.

இது ஒருபுறம் இருக்க மருத்துவத்துறையில்தான் எத்தனை வியக்கத்தக்க வளர்ச்சி, கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தம் செய்வது மாத்திரமல்ல, கத்தியின்றி, இரத்தமின்றி , தையலின்றி, அறுவை சிகிச்சை செய்யும் லாப்ராஸ்கோப் முறை, உடல் உறுப்புகளை உற்று நோக்கிப் பார்த்து நோயைக் கண்டுபிடிக்க எண்டாஸ்கோப் என்ற கருவி, இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்பைக் கண்டுபிடிக்க ஆஞ்சியோகிராம் என்னும் நவீன முறை என்று ஏகப்பட்ட புதிய வரவுகள் மருத்துவத்திற்குள் நுழைந்து விட்டது.

கருவில் உள்ள குழந்தையின் வளர்ச்சியைக் காண ஸ்கேனர் இயந்திரம் வந்திருப்பது மாத்திரமல்ல ஒருவருடைய இதயம், சிறுநீரகம் போன்றவற்றை மற்றொருவருக்குப் பொருத்தி மறுவாழ்வு கொடுக்கும் மருத்துவ வசதி மகா உன்னத நிலையை அடைந்து விட்டது.

மனிதனின் அறிவுப் பெருக்கத்தின் மற்றுமொரு

மைல்கல் என்று சொல்லப்படுவது குளோனிங் என்கிற முறையாகும். இதன்படி ஆண்துணை இல்லாமலேயே இனப்பெருக்கத்தை உண்டாக்க முடியும் என்று கண்டுபிடித்து இந்த முறையில் ஒரு ஆட்டை ஆண் துணையில்லாமல் குட்டிப்போட வைத்தனர். இந்தக் குளோனிங் ஆட்டுக்குட்டிக்கு டாலி என்று பெயர் வைத்தனர்.

அத்தோடு ஆராய்ச்சியாளர் நிற்கவில்லை. இந்த அடிப்படையில் மனிதனையும் இனவிருத்தி செய்ய முடியும் என்று அவர்கள் சவால் விட்டனர். அது பெரிய சர்ச்சையை உண்டாக்கி விட்டது. மதவாதிகள் மனிதவள ஆர்வலர்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆகவே அந்த முயற்சி கைவிடப்பட்டது.

நல்லவேளை நாம் பிழைத்துக் கொண்டோம். இப்பொழுதே மக்கள் தொகை 600 கோடி. இந்த முறை வந்தால் அம்மாடி என்று அலற வேண்டியதுதான். எனினும் இந்த ஆராய்ச்சியை அவர்கள் நிறுத்தி விடவில்லை.

குளோனிங் முறையில் சிறுநீரகம், கணையம் போன்ற உள் உறுப்புகளை உருவாக்க முடியும் என்று அடித்துக் கூறுகின்றனர். காளான் வளர்ப்புப் பண்ணை இருப்பது போல கிட்னி பண்ணைகள் சீக்கிரம் வரப்போகிறது.

மருத்துவ உலகில் இன்னொரு புதிய வரவு லேசர் சிகிச்சை. இதன் மூலமும் கண், சிறுநீரகம் போன்றவற்றிற்கு அதிவேக அரிய நுட்பமான சிகிச்சைகளை செய்ய முடியும்.

அதிவேக வாகனங்கள் ஒரு பக்கம், அதிநவீன கண்டுபிடிப்புகள் ஒரு பக்கம் என்பது மட்டுமல்ல, தானியேல் 12 : 4ல் சொல்லியபடி ஜனங்கள் ஆராய்வார்கள், என்ற நிலை இறக்கை கட்டிப்பறக்கிறது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து,



மனிதனின் ஆராய்ச்சி ஆவல் அதிவேகம் கொண்டது. அதன் விளைவாக பூமிக்கு அடுத்த கிரகங்களை ஆராய ஆரம்பித்தனர். சந்திர மண்டலத்திற்கே ஆட்களை அனுப்பி ஆராயத்தொடங்கி விட்டனர்.

இதில் என்ன விசேஷம் என்றால் இந்த புத்தகத்தை நீங்கள் வாசிக்கும் காலகட்டத்தில் இந்தியாவும், சந்திரனுக்கு ராக்கெட்டை அனுப்பியிருக்கும். (மிஸ்டர் மாதவநாயர், சீக்கிரம் தேதி அறிவியுங்கள்).

சந்திரனுக்கு மாத்திரமல்ல செவ்வாய் போன்ற கிரகங்களுக்கும் ராக்கெட்டுகளை அனுப்பி மனிதன் ஆராய்ந்து கொண்டிருக்கிறான்.

இது ஒருபுறமிருக்க இந்த புத்தகத்தை எழுதிக் கொண்டிருந்த இந்த நாட்களில் (செப்-2008) உலக மக்களை அதிசயிக்க வைக்க, ஒரு சிலரை அதிர்ச்சிக்குள்ளாக்கிய, வெகு சிலரை அச்சத்திற்குள்ளாக்கிய அதி முக்கியமான ஆராய்ச்சிகள், ஆயிரக்கணக்கான அறிவியல் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து செய்தனர்.

இது செவ்வாயிலோ, புதனிலோ அல்ல, இந்த பூமியில் சுவிட்சர்லாந்தில் ஜெனிவாவிற்கு அருகில் நூறு மீட்டர் ஆழத்தில் (300 அடி) ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைத்து, ஆராய்ச்சி நடத்தி உள்ளனர்.

இந்தப் பிரபஞ்சம் எப்படி உண்டாயிற்று. பரிணாம வளர்ச்சியின்படிதான் உண்டாயிற்றா? என்ற கேள்விகளுக்குப் பதிலைக் காண இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர். முடிவு கிடைத்துவிட்டதா? என்று கேட்காதீர்கள். இப்பொழுது தானே அணுவை மோத விட்டிருக்கிறார்கள். அணு, அணுவாக முன்னேறி அனுபவங்களைப் பெற்று விடைகாண ஆண்டுகள் பல பிடிக்கும் என்று அவர்களே சொல்கிறார்கள்.

டார்வினின் பரிணாமக் கொள்கைக்கு இவ்வாராய்ச்சி வலு சேர்க்குமா என்று ஐயப்படுவதை விட தானியேல் 12 : 4க்கு வலு சேர்க்கும்படி இந்த ஆராய்ச்சிகள் நடைபெற்றதாகவே நான் கருதுகிறேன்.

உங்களை சுற்றியுள்ள உலகத்தைப்பாருங்கள். புதிய புதிய கண்டுபிடிப்புகள் கம்ப்யூட்டரின் அதி உன்னத வளர்ச்சி ஸ்மாட்கார்டு, ஏ.டி.எம் போன்ற அதி நவீன வசதிகள் பெருகும் போது அறிவு பெருகி விட்டதே என்று ஆச்சரியப்படாமல் ஆண்டவரின் வருகை நெருங்கிவிட்டது என்ற அறிவைப் பெறுங்கள்.

ஆரம்பத்தில் இயந்திர மனிதனாக வடிவமைக்கப்பட்ட ரோபோட்டுகள், சிலிக்கான் சில் (Chip) வந்த பிறகு வீடியோ கேமரா வசதியுடன் பார்க்கும் ரோபோட்டுகளாக, பேசும் ரோபாட்டுகளாக, உணர்வுகளை அறியும் ரோபாட்டுகளாக இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கிறது.

அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் ஒரு சிலையை நிறுவுவான், அது பேசும், பார்க்கும், தன்னை வணங்காதவர்களைக் கொல்லும், என்று எழுதப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இது எப்படி சாத்தியமாகும் என்று கேள்விக்குறியாகவும், மாயாஜால வித்தை போலவும் இருந்தது. ஆனால் இந்த அற்புதமான அறிவியல் படைப்பு அது சாத்தியம், இது சத்தியம் என்று சத்தமிட்டுக் கூவுகிறது.

எனக்குப் பிரியமானவர்களே! காலம் இனி செல்லாது! கர்த்தரின் வருகை சமீபம், இதோ கதவு அருகே அவர் நிற்கிறார், துயிலெழு, துள்ளியெழு, தூசியை உதறு, துரிதமாய் ஆயத்தப்படு!



**100 ஆண்டுகளில் அறிவுப் பெருக்கம் (கண்டுபிடிப்புகள்)**

| | |
|---|---|
| 1901 | வேக்கும் கிளீனர் |
| 1902 | குளிர்பதன வசதி |
| 1903 | இசிஜி (ECG) , விமானம் |
| 1904 | ரேடார், டையோடுகள் |
| 1905 | சத்தமில்லா துப்பாக்கிகள், பிளாஸ்டிக் |
| 1906 | வானொலி ஒலிபரப்பு |
| 1907 | மின் சலவை இயந்திரம் |
| 1908 | வாட்டர் கூலர் |
| 1910 | நியான் விளக்குகள் |
| 1911 | தட்டச்சு இயந்திரம் |
| 1913 | சிப்புகள் (Zips) |
| 1921 | ரோபோட்டுகள், இன்சுலின் மருந்து |
| 1923 | காது கேட்கும் கருவி |
| 1925 | டெலிவிஷன் |
| 1926 | திரவ எரிபொருள் ராக்கெட் |
| 1927 | பேசும் படங்கள் |
| 1928 | பென்சிலின் (தடுப்பு மருந்து) |
| 1930 | ஜெட் இன்ஜீன் |
| 1932 | ரேடியோ டெலஸ்கோப் |
| 1933 | மின்னியல் நுண்ணோக்கி |
| 1935 | எலக்ட்ரிக் கிட்டார் |
| 1938 | பால்பாய்ண்ட் பேனா, போட்டோ காப்பி (ஜெராக்ஸ்) |
| 1939 | ஹெலிகாப்டர் |
| 1942 | முதல் அணு உலை |
| 1944 | சிறுநீரக டயாலிசிஸ் இயந்திரம் |
| 1946 | மைக்ரோவேவ் ஓவன் |
| 1947 | டிரான்சிஸ்டர், மொபைல் போன் |

1952 வெள்ளித்திரை சினிமா
1953 டிரான்சிஸ்டர் ரேடியோ
1954 சூரிய மின்கலம்
1956 வீடியோ டேப்ரெக்காடர்
1957 செயற்கைகோள், எண்டோஸ்கோப்
1958 மைக்ரோசிப் மோடம் (Microchip)
1960 லேசர் கதிர், இதய துடிப்பு இயந்திரம்
1964 கம்ப்யூட்டர் மவுஸ்
1966 பாக்கெட் டெலிவிஷன்
1967 கையடக்க கால்குலேட்டர்
1968 செயற்கை இதயம்
1969 இணைய தளம்
1970 L-E-D மற்றும் L-C-D
1971 பிளாப்பி டிஸ்க்
1973 மரபியல் நுணுக்கம்
1975 கம்ப்யூட்டர் (PC), லேசர் பிரிண்டர்
1977 MRI ஸ்கேனர், இன்க்ஜெட் பிரிண்ட்டர்
1981 ஸ்கேனிங் மைக்ராஸ்கோப்
1989 வெப்சைட்

## 3

# உலகம் உணர்த்தும் உண்மைகள்

அறிவும் ஆராய்ச்சியும், ஆண்டவரின் வருகை சமீபம் என்று நமக்கு எச்சரிக்கை விளக்கு காட்டுவது ஒருபுறம் இருக்க இந்த உலகம் உணர்த்தும் உண்மைகள் வெகு அதிகமாகவே இருக்கிறது. கிறிஸ்துவின் வருகையின்போது விண்ணிலும், மண்ணிலும், கடலிலும், மனித உடலிலும் எண்ணற்ற அடையாளங்கள் நிகழும் என்று வேதம் பட்டியலிட்டுக் கூறுகிறது.

மத் 24, லூக் 21, மாற் 13 ஆகிய அதிகாரங்களில் இவைகளை நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

**பஞ்சங்கள் :-** கிறிஸ்து வரும்போது உலகில் பஞ்சம் இருக்கும் என்பது உண்மை. யோசேப்பு எகிப்திலிருந்த காலத்திலேயே பஞ்சம் இருந்தது. அப்போஸ்தலர் காலத்தில் முதல் நூற்றாண்டில் அகபு என்பவனின் தீர்க்கதரிசனத்தின்படி பஞ்சம் உண்டாயிற்று.

அந்தக் காலத்தலிருந்தே பஞ்சம் இருக்கிறதே அப்படி இருக்க பஞ்சங்கள் எப்படி அடையாளம் ஆகும் என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் ஒன்றை அறிய வேண்டும் அக்கால பஞ்சங்கள் தற்காலிகமானவை. அதற்கு மாற்று வழி பல இருந்தது. ஆனால் இனி வரப்போகிற பஞ்சம் என்பது தீர்க்கமுடியாத, மாற்று வழி காணமுடியாத, பணம் எவ்வளவு இருந்தாலும் ஆகாரம் கொள்ள முடியாத கடுமையான, **கொடிய பஞ்சம்** வரப்போகிறது.

பஞ்சம் ஏற்படுவதற்கு பொருளாதார ரீதியான காரணமென்ன என்பதை அறிய வேண்டும். தேவையைவிட உற்பத்தி குறையும்போது பஞ்சம் துளிர் விட ஆரம்பிக்கிறது.

இன்றைய அளவில் 650 கோடியை மக்கள் தொகை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் உணவு உற்பத்தியோ இந்த தேவையை சந்திக்க முடியாமல் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஈடாக குடியிருப்புகளை உண்டாக்கவும், தொழில் பேட்டைகள் உண்டாக்கவும் விவசாய நிலங்கள் கையகப்படுத்தி விட்டபடியால் உணவு உற்பத்தி அதிவேகமாய் குறைந்து வருகிறது.

ஒரு கால கட்டத்தில் ரஷ்யா போன்ற பெரிய நாடுகள் உட்பட பல நாடுகள் பசுமைப் புரட்சி, உணவு உற்பத்தி என்ற திட்டத்தில் வெகு அதிகமான ரசாயன உரங்களைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கினர். அப்போதைக்கு அது நன்றாகத்தான் இருந்தது, இப்பொழுதோ மண்வளம் குறைந்து விளைவிக்கும் தன்மையை அது இழந்து விட்டது. அதனால் உலக உணவு உற்பத்தியில் மிகப்பெரிய சரிவு.

இயற்கையின் எதிர்பாராத சீற்றங்கள், வெள்ளப் பெருக்கு, சூறாவளிக் காற்றுகள் இவைகள் போன்றவற்றினால் மிகப்பெரிய விளைச்சல் சேதம் ஆண்டுதோறும் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளால் மாபெரும் பஞ்சம் இந்த உலகத்தை கவ்வப் போகிறது என்பது உண்மை. இந்த புத்தகத்தை நான் எழுதிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் நேபாளம், மற்றும் பீகாரில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் உலகத்தையே உலுக்கிவிட்டது.

நேபாளத்தில் வெள்ளப்பெருக்கெடுத்த கோஷி நதியில் ஏற்பட்ட உடைப்பினால் பீகாரின் பெரும்பகுதி மூழ்கிப் போனது. ஆறிலிருந்து பத்து லட்சம் வரைக்கும் மக்கள் தங்கள் வீடுகளையும் உடமைகள் அனைத்தையும் இழந்து போனார்கள்.



இதில் இரத்தம் கசிய வைத்த செய்தி என்ன தெரியுமா? வெள்ளத்திலிருந்து உயிர் தப்பியவர்கள் வறுமை தாங்கமுடியாமல் தங்கள் சொந்தப் பிள்ளைகளை விற்கத் தொடங்கி விட்டார்கள் என்பதுதான்.

இதயத்தைப் பிளக்கும் இந்த செய்தி ஒருபுறம் இருக்க தனது மூன்று பிள்ளைகளுடன் கிணற்றில் விழுந்து வறுமையினிமித்தம் தற்கொலை செய்து கொண்டாள் ஒரு பெண். (எப்படியோ பெரிய ஜீவனை காப்பாற்றி விட்டார்கள், ஆனால் வருங்கால சமுதாயத்தைச் சார்ந்த மூவர் வறுமையினால் மரித்துப் போனார்கள்).

இது எங்கோ நடந்ததல்ல, எங்கள் ஈரோடு மாவட்டத்திற்கு அடுத்துள்ள சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற உண்மைச் செய்தி. பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சியில் வந்த ஆதாரப் பூர்வமான செய்தி.

மேற்சொன்னவைகளெல்லாம் உள்நாட்டில் வந்த செய்திகள். ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள பலநாடுகளில் ஒரு வேளை ஆகாரம் கூட கிடைக்கப் பெறாத பல நாடுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவைகளெல்லாம் பஞ்சம் ஆரம்பிக்கப் போகிறதென்பதற்கு ஆரம்பச் சுழிதான், இதைவிட இன்னொரு மிகப்பெரிய காரணத்தினால் மகாப்பெரிய உணவுப் பஞ்சம் வரப்போகிறது.

அந்தப் பிரச்சினையை சமாளிக்கத்தான் உலகத் தலைவர்கள் + விஞ்ஞானிகள் மண்டையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். அது என்ன? அடுத்த குறிப்பைப் பாருங்கள்.

**உலகம் வெப்பமயமாதல் : –** சூரியக் கதிர்கள் பூமிக்கு வருவது நல்லது, அதனால்தான் நாம் பிழைக்கிறோம், தாவரங்கள் தழைக்கிறது. அதே சமயம் சூரியனிலிருந்துப் புறப்படுகிற தேவைக்கு அதிகமான வெப்பம், மற்றும் தீமை

விளைவிக்கும் கண்ணுக்குப் புலப்படாத கதிரியக்கங்களை ஆகாய மண்டலத்தில் உள்ள திரை போன்ற ஓசோன் படலம் தடுத்து வந்தது.

ஆனால் பூமியிலிருந்து மேல்நோக்கிப் புறப்பட்ட எண்ணற்ற இரசாயன வாயுக்கள், துகள்கள் அந்த ஓசோன் படலத்தை சீரழித்து விட்டன. அதனால் சூரியனுடைய வெப்பம் வருடா வருடம் பூமியை அதிகமாகவே தாக்க ஆரம்பித்திருக்கிறது.

பூமி உருண்டையில் மூன்றில் ஒரு பகுதிதான் நிலப்பரப்பு. மற்ற இரண்டு பகுதிகள் கடலும் பனிப்பாறைகளும்தான். சூரிய வெப்பம் அதிகமானால் பனிப்பாறைகள் உருகி பூமியின் நிலப்பரப்பை சுவாகா பண்ணும். அதனால் விளைச்சல் வெகு அளவில் பாதிக்கப்படும்.

பிப்ரவரி 2008ல் அயர்லாந்தில் கூடிய ஒரு சிறிய கருத்தரங்கில் உலக வெப்பமயமாகுதலைக் குறித்த ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை ஒரு ஆராய்ச்சியாளர் வழங்கி உள்ளார்.

அதில் மேற்கூறிய கூற்றுடன் சூரியனிலிருந்து புறப்படும், சில குறிப்பிடத்தக்க கதிரியக்கத்தினால் மகா கொடிய சரும வியாதிகள் தோன்றும் என்றும், உலகில் தற்போதுள்ள சில உயிரிகள் முற்றிலும் அழிந்தே போகும் என்றும், அதனால் தாவரவியலில் மிகப்பெரிய மாற்றமும், இழப்பும் ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளார்கள்.

மேலும் கடலலைகள் முழக்கமாயிருப்பதற்கும், கடல் பரப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கும் இந்த உலக வெப்பமயமாகுதலும் ஒரு காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

**அலைகளின் முழக்கம் :-** லூக்கா 21 : 25 வசனத்தில் சமுத்திரமும், அலைகளும் முழக்கமாயிருக்கும் என்ற வசனம்



வழக்கமான ஒன்று என்று 2005 வரை எல்லோரும் நினைத்திருந்தார்கள். 2005 டிசம்பரில்தான் கடல் அலையின் முழக்கம் என்றால் என்னவென்று உலகம் புரிந்து கொண்டது. **சுனாமி** 21ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட உலக மகா துயரம். லட்சோப லட்சம் மக்கள் உடைமைகளை இழந்தது மாத்திரமல்ல உயிரையும் இழந்தது எத்தனைப் பரிதாபம்.

அப்படி மரித்தவர்களை அடையாளம் காணமுடியாமல் அடக்கம் பண்ணுவாரில்லாமல் குவியல் குவியலாய் எரித்ததையும், பொக்லைன் இயந்திரங்கள் மூலம் வாரி ஒட்டுமொத்தமாக புதைத்ததையும் தொலைக்காட்சியில் பார்த்த நினைவு இன்னும் அழுத்தமாக இதயத்தை தாக்கிக் கொண்டிருக்கிறது.

பூமியதிர்ச்சியும், கடலலை முழக்கமும் விட்டபாடில்லை. உலகின் ஏதாவது ஒரு பகுதியில் ஒவ்வொரு நாளும் பூமியதிர்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த சுனாமி என்னும் ஆழிப்பேரலையின் ஆபத்தினால், அச்சுறுத்தலினால், இந்தோனேஷியா, அந்தமான், குமரி மாவட்டம் ஆகிய கடலோர பகுதிகள் இன்னும், இன்றும் மக்கள் பாதிக்கப்படுவதுடன் சுற்றுலா வளர்ச்சியும் மாபெரும் அதிர்ச்சியைக் கண்டுள்ளது.

**கொள்ளை நோய்கள் :- (லூக். 21 : 11)** கடைசிக்காலத்தின் மற்றொரு அடையாளம் கொள்ளை நோய்கள். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஏகப்பட்ட தீர்க்கப்பட முடியாத புதிய புதிய நோய்கள் வந்து கொண்டேயிருக்கிறது. அதிநவீன மருந்துகள், அற்புதமான மருத்துவக் கருவிகள் என்று அனுதினமும் முன்னேற்றத்தை உலகம் கண்டாலும், புதிது புதிதாய் எழும்புகிற கொள்ளை நோய்களை தடுத்து நிறுத்தவோ, குணப்படுத்தவோ முடியாமல் உலகமே திகைக்கிறது. எய்ட்ஸ் என்ற உயிர்க்கொல்லி நோயைக் குறித்து கேள்விப்

பட்டிருப்பீர்கள். இவ்வுலக அரங்கையே அதிர்ச்சிக்குள்ளாக்கின நோய். இந்நோய் வந்தவரை குணமாக்கக்கூடிய மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுதான் பரிதாபம்.

அதை விடுங்க! நமக்கு இதெல்லாம் வராது, நாம தப்புத்தண்டா பண்றதில்லை, என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. எய்ட்ஸ் மாத்திரம் தான் கொள்ளை நோய் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது.

திருவாளர் "**கொசு**" நாளுக்கு நாள் முன்னேறிவருகிறார். மலேரியா என்ற காய்ச்சல், பயலேரியா என்ற யானைக்கால் வியாதி என்ற எல்லையெல்லாம் தாண்டி "**சிக்குன் குனியா**" என்ற புதிய வியாதியை பரப்ப ஆரம்பித்துவிட்டார். இதில் சிக்கி சின்னாபின்ன மானவர்கள் ஏராளமானோர்.

பயில்வான் போன்றவர்களெல்லாம் இந்நோயினால் பாதிக்கப்பட்டு தடியை பிடித்துக் கொண்டு காந்தியைப் போல நடைபயணம் சென்றது பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"பறவைக் காய்ச்சல் (Bird Flu)" என்ற ஒரு புதிய நோய் பறவை இனத்தின் மூலமாய் மனித இனத்திற்கு மிகப்பெரிய தாக்கத்தை உண்டாக்கியது. இதனால் மரணத்தையும் எண்ணற்றோர் கண்டனர். முன் எப்போதும் இல்லாத அளவிற்கு உடல் உள் உறுப்புகளில் மிகப்பெரிய மாற்றங்கள், வியாதிகள், செயலிழப்புகள் மனுக்குலத்திற்கு உண்டாயிருக்கிறது.

இப்பொழுது "**ஆஸ்திரேலியன் அனால்ஜியா**" என்ற புதிய நோய் உலக நாடுகளை கவலைக்குள்ளாக்கி யிருக்கிறது. பிரியமானவர்களே! கொள்ளை நோய்களின் பெருக்கம் கிறிஸ்துவின் வருகை சமீபம் என்பதற்கு எச்சரிக்கை விளக்கு என்பதை மறந்து விடக்கூடாது. புதியப் புதிய நோய்களுக்கு இந்த உலகம் தானே வரவேற்பு வலை விரித்துக் கொண்டிருக்கிறது. அஃது தான் உலகம் மாசுபடுதல் என்று அறிஞர்கள்



கவலைப்படுகிறார்கள். காற்று மாசுபடுதல், தண்ணீர் மாசுபடுதல், ஒளி மாசுபடுதல் என்று எல்லாமே அசுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. வாகனங்கள் வெளியிடுகிற கரும்புகைகள், ஆலைகளிலிருந்து வெளியேறுகிற இரசாயனப் புகைகள், காற்று மண்டலத்தை கடுமையாக பாதிக்கின்றன.

இதனை சுவாசிப்பவர்களுக்கு, சுவாச மண்டலத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு, ஆஸ்துமா, காசநோய், இதய நோய் என்று எண்ணற்ற நோய்கள் பெருகிக்கொண்டே இருக்கிறது.

மேலும் காற்றில் கலந்துவிட்ட இரசாயன நச்சுக்கள் மழை பெய்யும் பொழுது அமில மழையாய் பூமியை நோக்கி வருவதினால் சொல்லொண்ணா வியாதிகள் மனிதருக்கும் மிருக ஜீவன்களுக்கும் ஏற்படுகிறது.

ஆகவே இந்த உலகத்தை காப்பாற்ற யாராலும் முடியாது, என்பதை நினைவில் வையுங்கள்.

**பூமியும் வானமும் அசைக்கப்படுதல் :–** கடைசி நாட்களில் பூமியதிர்ச்சிகளும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப் படுதலும் நடைபெறும் என்பது, வேதம் சொல்கிற மற்றொரு வருகையின் அடையாளங்கள் ஆகும்.

மோசே காலத்தில் பூமி இரண்டாய்ப் பிளந்ததும், இயேசு கிறிஸ்து ஜீவனை விட்டபொழுது பூமியதிர்ந்ததும் நிலநடுக்கம் என்ற வகையைச் சார்ந்ததாக இருந்தாலும் அவைகள் எப்போதாவது எங்காவது அத்தி பூத்தாற்போல் நடைபெற்ற சம்பவங்களாகும்.

ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளில் வியக்கத்தகு காரியங்கள் நடந்து வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு பூமியதிர்ச்சிகளின் எண்ணிக்கைகள் கூடுவதுடன் அவைகள் விளைவிக்கிற சேதாரங்களின் அளவும் கூடிக்கொண்டே போகிறது.

இவ்வாண்டு (2008) சீனாவில், இந்தியாவில் ஏற்பட்ட பூகம்பங்கள் பெரும் சேதத்தை விளைவித்தன. தற்கால தேவைக்கேற்ப மிக உயரமான கட்டிடங்கள் கட்டப்படுவதால் பூமியதிர்ச்சியின்போது அவைகள் அட்டைப்பெட்டிகளைப் போல சரிந்து விழுந்து பெரும் அழிவை சந்திக்கின்றன.

நான் முன்னே குறிப்பிட்டது போல நாளொன்றுக்கு ஏதாகிலும் ஒரு இடத்தில் பூமியதிர்ச்சி நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. காற்று அடித்து மழை பெய்வது போல பூமியதிர்ச்சியும் அன்றாட வழக்கமாகி விட்டபடியால் அன்றாட விளம்பரங்களில்கூட “எங்கள் முறுக்கு கம்பிகள் பூமியதிர்ச்சியையும் தாங்கும் பெலன் கொண்டவை” என்று தொலைக்காட்சி விளம்பரங்கள் சொல்கின்றன.

தொலைக்காட்சி பார்த்தவர்களே! முறுக்கு கம்பிகள் விளம்பரம் வரும்பொழுது பூமியதிர்ச்சியை சமாளிக்க யோசனை பண்ணாமல் கர்த்தரின் வருகையை சந்திக்க யோசனை செய்யுங்கள்.

பூமி மாத்திரமல்ல வானத்தின் சத்துவங்களும் அசைக்கப்படும் என்று வேதம் சொல்கிறது. மேலும் வானத்தில் அடையாளங்கள் தோன்றும் என்று சொல்கிறது. கோள்களின் சுற்றுப் பாதையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சூரியனின் மையப்பகுதியில் கரும்புள்ளிகள் தோன்றியுள்ளது என்று வான ஆராய்ச்சி நிபுணர்கள் சொல்கிறார்கள்.

வானத்திலிருந்து வினோதமான கற்கள் பூமியின் மேல் விழுகிறது. கல் என்றால் கடலைமிட்டாய் சைஸ் என்று நினைக்காதீர்கள். குறைந்த பட்சம் ஆறு முதல் பத்து அடி விட்டமுள்ள கற்கள். செப்டம்பர் 2008ல் தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில்



வானத்திலிருந்து ஒரு பெரிய கல் வந்து விழுந்தது (அதை தமிழ் தொலைக்காட்சிகளில் காட்டினார்கள்)

அந்தக் கல் துண்டுகளை ஆராய்ந்து, அது விண்கற்கள் தான் என்று சான்று கொடுத்துள்ளனர்.

தமிழ் கிறிஸ்தவர்களே! உஷார், உஷார் தமிழ்நாட்டிற்கு வருகிற சிக்குன் குனியா, பறவைக் காய்ச்சல், பூமியதிர்ச்சி, சுனாமி, விண்கற்கள் எல்லாம் எதற்காகத் தெரியுமா? நான் வரப்போகிறேன், விழித்தெழுங்கள், விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுங்கள், என்று உங்களுக்கு உணர்த்துவதற்காகத்தான்.

**யுத்தங்கள் (மத் 24 : 6) :-** கிறிஸ்துவின் வருகையின் மற்றுமொரு அடையாளம் யுத்தங்கள். முதல் இரண்டு உலகப்போர் நடந்து முடிந்த பிறகு, சமாதான உலகை உருவாக்க உலக நாட்டுத்தலைவர்கள் முயற்சித்தனர். ஆனால் அது தோல்வியில்தான் முடிந்தது.

இந்த ஐம்பது ஆண்டுகளில் மட்டும் சராசரியாக எல்லா நாளுமே உலகின் எங்கேயாவது ஒரு பகுதியில் யுத்தம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. பெரிய நாடுகள், சிறிய நாடுகளைத் தாக்குவதும் சிறிய நாடுகளுக்கு உதவி செய்வது போல இன்னொரு நாட்டிற்கு இடையூறுவை உண்டாக்குவதும் சில நாடுகளுக்கு பொழுது போக்காகவே இருக்கிறது.

அண்டை நாடுகளுக்கிடையில் யுத்தம், உள் நாடுகளுக்கிடையில் யுத்தம் என யுத்தங்கள் நடந்து கொண்டேதானிருக்கிறது. இந்தியா – பாகிஸ்தான், இலங்கை, ஈராக், ஆப்கானிஸ்தான், இஸ்ரேல் – அரபு நாடுகள், என்று யுத்தத்தை சந்திக்கிற நாடுகள் ஏராளம்.

இவைகள் போதாதென்று தீவிரவாத இயக்கங்கள், மதவாத இயக்கங்கள், ஜாதிய வெறிபிடித்தவர்கள் என்று சண்டைகளை இந்தியாவில் ஏற்படுத்துகிற கூட்டம் ஏராளம். உலக

கணக்கின்படி உணவு உற்பத்தியைவிட சுகாதாரத்திற்கான செலவைவிட இராணுவத்திற்காக செலவிடப்படும் தொகையே மிக அதிகமானது என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

அணு ஆயுத யுத்தம் வெடிக்கக்கூடாது என்று அனைத்து நாடுகள் விரும்பினாலும் அது ஒருநாள் வெடிக்கத்தான் போகிறது. அதற்கான ஆயத்தந்தான் இந்த குட்டிக்குட்டி யுத்தங்கள். அந்த யுத்தம் வருவதற்கு முன்பு கர்த்தர் வருவார், அவரை சந்திக்க ஆயத்தப்படுவோம்.

**பின்மாற்றமும் எழுப்புதலும் : –** இந்த பரந்த உலகத்திற்குள் இன்னொரு உலகம் இருக்கிறது, அதுதான் ஆவிக்குரிய உலகம், அதாவது தேவ ஜனமாகிய சபையே அந்த உலகம். கிறிஸ்து வருவதற்கு முன்பாக இந்த உலகத்திற்குள்ளும் சில அடையாளங்கள் தோன்றும்.

★ அன்பு தணிந்து போம்
★ விசுவாசத்தைக் காண்பதறிது
★ கள்ளக் கிறிஸ்துக்கள் தோன்றுவார்கள்
★ கள்ள தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள்
★ துர் உபதேச அலைகள் வீசும்

இப்படிப்பட்ட எதிர்மறையான நிகழ்வுகள் அடையாளமாக ஒருபுறம் தோன்ற மற்றொரு பக்கம்

★ இராஜ்யத்தின் சுவிசேஷம் சர்வ சிருஷ்டிக்கும் அறிவிக்கப்படும்

★ மாம்சமான யாவர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்படும்.

இவைகளை காண்கிற பொழுது அவர் வாசலருகே வந்து விட்டார் என்று அறியுங்கள்.

கிறிஸ்தவ உலகத்திற்குள்ளேயே அநேக பரியாசக்காரர் எழும்பியிருப்பது வேதனைக்குரியது. அவரின் வருகையை நம்பாததும், கன்னிப் பிறப்பை விசுவாசிப்பதை விட்டு விலகுவது



மாத்திரமல்ல வித்தியாசமான விமர்சனங்களை கூறும் ஒரு கூட்டம் எழும்பியிருக்கிறது.

தேவனிடத்திலும் அன்பில்லை, தேவ ஜனத்தினிடத்திலும் அன்பில்லை. தங்களை மாத்திரம் நேசித்து தங்களுடைய காரியங்களை மாத்திரம் யோசித்து அவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் சுயவிரும்பிகள் பெருகிவிட்டார்கள். இவர்களை வேதம் தற்பிரியர் என்று சொல்கிறது.

தீர்க்கதரிசனம் என்ற பெயரில் தங்கள் பையை நிரப்பிக் கொள்ள, பொய்யை அவிழ்த்துவிடும் மெய் வழியை விட்டு விலகினவர்கள் பலர் எழும்பியிருக்கிறார்கள். இவர்கள் பின்னால் மக்கள் ஓடுவது தான் வேதனை. சிட்சித்து வேத வசனங்களை போதிப்பவர்களைவிட தங்கள் இச்சைக்கேற்றபடி சொல்லு கிறவர்களை ஜனங்கள் தேடிச் செல்கிறார்கள். இப்படிப்பட்டவர் களைப் பார்த்து **“மோசம் போகாதிருங்கள்”** என்று ஆவியானவர் எச்சரிக்கிறார்.

ஆனாலும் பெரிய சந்தோஷம் என்ன தெரியுமா? இராஜ்யத்தின் சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் மட்டுமல்ல சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்படுகிறது. வானொலி, தொலைக்காட்சி இவைகள் மூலமாய் எல்லாமொழிகளிலும், எல்லா நாடுகளுக்கும் இறைச் செய்தி அறிவிக்கப்படுகிறது. ஏறக்குறைய உலகத்தின் எல்லாப்பகுதிகளும் நற்செய்தி மயமாக்கப் பட்டிருக்கிறது.

கர்த்தரின் ஊழியர் நுழைய முடியாத, நாடுகளிலும் வீடுகளிலும் ஒலி, ஒளியுமாய் தேவனுடைய நற்செய்தி பிரசங்கிக்கப்படுகிறது. நீங்கள் வேண்டுமானால் உங்கள் தொலைக்காட்சிப் பெட்டியின் சேனல்களை திருப்பிக் கொண்டே வாருங்கள், குறைந்த பட்சம் இரண்டு சேனல்களாகிலும் 24 மணி நேர இறை வசன சேவை இருக்கும். இதுவே கிறிஸ்துவின்

வருகையின் அடையாளம்.

இதைவிட பெரிய மகிழ்ச்சி என்ன தெரியுமா? "கடைசி நாளில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்ற வாக்கு நிறைவேறுவதுதான் எல்லா ஊர்களிலும், எல்லா சபைகளிலும், எல்லா வயதினர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவது எவ்வளவு பெரிய கிருபை.

ஆம்! இயேசு வருகிறார்! இந்த பூவுலகில் மாத்திரமல்ல, கிறிஸ்தவ உலகத்திலும் இயேசு சொன்ன அவரின் வருகையைக் குறித்த அடையாளங்கள் அப்படியே நிறைவேறி விட்டன. நீங்களும், நானும் ஆயத்தப்பட வேண்டுமென்பதற்காகவே அனுக்கிரக காலத்தை நீட்டியிருக்கிறார். ஆயத்தப்படுங்கள். அவருக்குள் நிலைத்திருங்கள்.

இதுவரை ஆராய்ந்த அடையாளங்களை விட மற்றும் இரண்டு அதிமுக்கிய ஆதாரங்கள் வேதத்தில் இருக்கிறது. ஒன்று சிதறிப்போன யூத ராஜ்யம் திரும்ப கட்டப்பட வேண்டும், மற்றொன்று சிதறிப்போன ரோமப் பேரரசு திரும்ப வல்லரசாக உருவெடுக்க வேண்டும். அது ஏன்? எப்படி? என்பதை அடுத்த அத்தியாயங்களில் எழுதுகிறேன்.

# 4

# இஸ்ரவேல் என்னும் அத்திமரம்

அத்தி மரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; "அதிலே இளங்கிளை தோன்றி துளிர்விடும்போது வசந்த காலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்".

அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள். (மத் 24 : 32,33)

யூதர்களுடைய மார்க்க சிலாக்கியத்திற்கு ஒலிவ மரமும், ஆவிக்குரிய சிலாக்கியத்திற்கு திராட்சைச் செடியும், அரசியல் வளர்ச்சிக்கு அத்தி மரமும் அடையாளமாக பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் குறிக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அதாவது இஸ்ரவேலில் அத்திமரம் என்கிற ஆட்சியின் சிலாக்கியம் துளிர் விட்டு இளங்கிளை தோன்றி செழிப்புடன் இருக்கும் காலக்கட்டத்தில் இயேசு கிறிஸ்துவின் வருகை இருக்கும் என்பதே இந்த தீர்க்கதரிசனத்தின் மெய்யான கருத்து.

இந்த தீர்க்கதரிசன கால அளவின் வீச்சு மிக அதிகம். அந்தக் காலக்கட்டத்தில்தான் எத்தனை மாற்றங்கள்! எத்தனை அதிசயங்கள்!

ஒரு நூறு ஆண்டுகளுக்கு முந்தின காலத்தில் தயாரிக்கப்பட்ட உலக வரைபடத்தை (World Map) உற்றுப் பார்த்தால் அதில் இஸ்ரவேல் என்கிற தனிநாட்டை உங்களால் காண முடியாது. காரணம் பத்தொன்பது நூற்றாண்டுகளாக யூத மக்கள் இருந்தனர், பெருகினர் என்பது உண்மையானாலும்

சொந்த நாடு இல்லாமல் அனாதைகளாய், அகதிகளாய், குடியேறிகளாய் அகிலத்தின் அனைத்து நாடுகளிலும் அலைந்தார்கள் என்பதே உண்மை.

ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானைப் பெற்ற இந்த ஜனம் தங்கள் சொந்த நாட்டை இழந்தது எப்போது? எப்படி? என்றும், அலைந்து திரிந்த பட்டுப்போன மரமாகிய அத்திமரம் என்னும் இஸ்ரவேல் இராஜ்யம் எப்பொழுது துளிர்விட்டது? அது இப்பொழுது எந்த நிலையில் உள்ளது? அதை அடைய அவர்கள் என்ன கிரயம் கொடுத்தார்கள்? அவருடைய வாழ்க்கையின் – வரலாற்றில் தேவன் நடப்பித்த கிரியைகள் எவைகள்? என்ன? என்பதை இங்கு விளக்கப் போகிறேன்.

ஐயா ஆள விடுங்க சரித்திரப் பாடம் நடத்தி எங்களை குழப்பி விடாதீங்க எங்களப்பற்றி சொல்லுங்க. இயேசுவைப் பற்றிச் சொல்லுங்க. இஸ்ரவேலைப்பற்றி நமக்கு எதுக்குங்க, என்று சலித்துக் கொள்ளாதீங்க.

இயேசுவின் வருகையைப் பற்றிய அறிவும் உங்களுக்கு வருகையைக் குறித்த உணர்வும் உண்டாகவேண்டுமானால் இஸ்ரவேலின் வரலாற்றை நீங்கள் கண்டிப்பாக தெரிந்துகொள்ள வேண்டும். அவர் வருகையின் அடையாளங்களில் – ஹைலைட் மேட்டரே இதுதான்.

இயேசு கிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்த நாட்களில் நியாயத் தீர்ப்பின்போது பிலாத்து கையைக் கழுவி நழுவிக் கொண்டான். ஆனால் யூதர்களோ, “இந்த இரத்தப் பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக” என்று மூர்க்கத்தனமாக – முட்டாள்தனமாக முழங்கினார்கள்.

இது ஒரு புறமிருக்க “இந்த ஆலயம் ஒருகல்லின் மேல் ஒரு கல் இராதபடி இடித்துப்போடும் காலம் வரும்” என்று இயேசு



சொன்னார். இவை இரண்டும் உடனே நடைபெறவில்லை. அதே சமயம் அதிக தாமதமும் படவில்லை.

கி.பி. 70ல் தீத்து இராயன் என்பவன் எருசலேமை முற்றுகையிட்டு அதை அழித்தான். லட்சக்கணக்கான யூதர்கள் மரித்தனர். எண்ணற்றோர் சிலுவையில் அறையப்பட்டனர். பலர் சிறையாகப் பிடிக்கப்பட்டனர்.

தேவாலயத்திற்குள் எதிராளிகள் நுழையக் கூடாது என்று எண்ணின பக்தி வைராக்கியமுள்ள ஏதோ ஒரு யூதன் தீப்பந்தத்தை தேவாலயத்திற்குள் எறிய, தேவாலயமே தீக்கிரையானது. தேவாலயத்திற்குள் அலங்கார வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பொன் உருகி தேவாலயக் கற்களின் நடுவில் ஓடியது.

கொள்ளையிட நினைத்தவனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது, தேவாலயத்தின் கற்களை ஒவ்வொன்றாய் தட்டி எடுத்து அதனூடே உருக்குலைந்திருந்த தங்கத்தை சேகரித்தார்கள். தேவாலயம் தரைமட்டமாகியது.

இப்பொழுது நிலுவையில் இருந்த இரண்டு காரியமும் ஒரே சமயத்தில் நடைபெற்றது. தேவாலயம் தகர்க்கப்பட்டது. யூதருடைய இராஜ்யம் சூரையாடப்பட்டது. அடுத்து எழுபது ஆண்டுக்குள் பல படையெடுப்புகள் நிமித்தம் இஸ்ரவேலர் சொந்த நாட்டை விட்டு உலகத்தின் பல நாடுகளுக்கு ஓடிப்போனார்கள்.

இஸ்ரவேலரின் சொந்த இராஜ்யமோ ரோமர், துருக்கியர். அரேபியர் என்ற பல ஆட்சியாளர்களின் வசத்தில் மாறி மாறி இருந்தது. இது தான் யூத ஜாதியின் ஆளுகையின் அந்தஸ்தாகிய அத்திமரம் பட்டுப் போன வரலாறு.

ஆனால் இயேசுக்கிறிஸ்து வருவதற்கு முன்பாக

இஸ்ரவேலருக்கு தனி நாடும் ஆளுகையும் இருக்க வேண்டும். அது துளிர்விட்டு கிளைவிட வேண்டும். அப்படி நடந்தால் இயேசு வரப்போகிறார் என்பது அடையாளம்.

இஸ்ரவேல் நாடு மீண்டும் எப்போது உதயமானது? துளிர்விட்டு விட்டதா? இளங்கிளை தோன்றி விட்டதா? என்பதை நீங்கள் அறிந்து கொள்வது நல்லது!

உலகமெங்கும் சிதறிப்போன யூதர்கள், பல நாடுகளில் சொல்லொண்ணாத துயரப்பட்டார்கள். ரஷ்யா போன்ற நாடுகளில் மிக அதிகமாக உபத்திரவப்பட்டார்கள். இந்தியா, சீனா, ஆப்பிரிக்கா, ஸ்காண்டிநேவியன் நாடுகள் என்று எல்லா இடங்களிலும் யூதர்கள் பரவி சிதறிக்கிடந்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் சில யூதர்களுக்குள்ளே தங்கள் தாய்நாட்டைக் குறித்த பாரம் உண்டானது. தங்கள் தேவனாகிய கர்த்தர் தங்கள் பிதாவாகிய ஆபிரகாமிற்கு கொடுத்ததாகிய “தங்கள் சொந்த தேசத்தை திரும்ப சுதந்தரிக்க வேண்டும்” என்ற எண்ணத்தை, உலக முழுவதிலுமுள்ள யூதர்களுக்கு உணர்த்த விரும்பினார்கள்.

அதற்கு உதவியாக 1897ல் சுவிட்சர்லாந்தில் சீயோன் சங்கம் என்னும் யூத நல அமைப்பை உருவாக்கினார்கள். இவ்வியக்கம் பத்திரிகைகளின் மூலமாக சொந்த நாட்டைக் குறித்த வைராக்கியத்தை உலகம் முழுவதுமுள்ள யூதருக்கு உண்டாக்கியது.

அந்தக்கால கட்டத்தில் பாலஸ்தீனா என அழைக்கப்பட்ட யூதருடைய இராஜ்யம் துருக்கியரின் ஆளுகையின் கீழிருந்தது. பணம் படைத்த பல யூதர்கள் நிதி திரட்டி துருக்கியரிடம் உள்ள தங்கள் சொந்த நாட்டை கிரயம் கொடுத்து வாங்க பேச்சு வார்த்தை நடத்தினர். துருக்கிய சுல்தானோ மிக ஏளனமாக



எகிப்தில் ஓடுகிற நைல்நதியின் தண்ணீர் எதிர்திசையில் பாய்ந்து பாலஸ்தீனத்திற்கு வந்தால் அது உங்களுடையதாகும் என்று கல்தா கொடுத்து அனுப்பி விட்டான் - சாரி அல்வா கொடுத்து விட்டான்.

இந்த சமயத்தில்தான் முதலாம் உலக மகாயுத்தம் நடைபெற்றது. ஆங்கிலேயர் ஜெர்மானியர் என்ற இரண்டு எதிரெதிரணியினருடன் 33 நாடுகள் சேர்ந்து நடத்திய யுத்தம் இது.

ஆரம்பத்தில் ஆங்கிலேயர் அணியிலிருந்த துருக்கியர், ஆங்கிலேயர் தோல்வி முகத்திலிருப்பதைக் கண்டு கட்சி மாறி எதிரணியாகிய ஜெர்மனியோடு சேர்ந்து விட்டனர். சிலர் அணிவிட்டு அணி மாறுவது நல்லது. அது அந்தக் காலத்திற்கும் பொருந்தும் இந்தக் காலத்திற்கும் பொருந்தும். மேட்டரைப் பிறகு சொல்கிறேன். விஷயத்தை தொடர்ந்து கவனியுங்கள்.

ஆங்கில அரசு இங்கிலாந்திலிருந்த யூத வேதியியல் நிபுணரான டாக்டர் வைஸ்மேன் என்பவரை உதவிக் கோரியது. அவர் அதிநவீன வெடிமருந்து ஒன்றினை கண்டுபிடித்து ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். அப்புறமென்ன! ஆங்கிலேயர் யுத்தத்தில் பட்டாசுக் கிளப்ப ஆரம்பித்தனர்.

இந்த அரிய கண்டுபிடிப்பிற்காக உங்களுக்கு நன்றிக்கடன் செலுத்த விரும்புகிறோம், உங்களுக்கு என்ன வேண்டும் என்று ஆங்கிலேயர் கேட்டனர். அதற்கு டாக்டர் வைஸ்மேன் பொன்னை நான் விரும்பவில்லை, தாய் மண்ணைப் பெற விரும்புகிறேன் என்றார்.

அதாவது துருக்கியர் வசமுள்ள பாலஸ்தீனாவுக்குச் சென்று அதனை வென்று அதை யூதருக்கென்று தரவேண்டும். இது எனது ஆசை மாத்திரமல்ல, எங்கள் சீயோன் சங்கமும் இதைத்தான் விரும்புகிறது என்றார்.

இதன் விளைவாக ஆங்கில பிரபு பால்பர் என்பவர் யுத்தத்தில் ஆங்கியேலர் பாலஸ்தீனாவை வென்றால் அதில் யூதருக்கு முழுக்குடியுரிமை வழங்குவோம் என்று மாபெரும் அறிவிப்பை வெளியிட்டார்.

யுத்தத்தில் ஆங்கிலேயர் கள் முன்னேறிவிட்டார்கள். பாலஸ்தீனாவை முற்றுகையிட்டு விட்டார்கள். அந்த சேனையை நடத்தியவர் ஆலன்பி என்பவர். அவர் ஆங்கிலப்படைத் தலை வனாக இருந்தாலும் யூதக் கிறிஸ்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே கூடுமானவரை யுத்தம் செய்யாமலே, குண்டு மழை பொழியாமலே எருசலே மை பிடிக்க வேண்டு மென்று இருந்தார்.

**சியோன் சங்கம்**

சுவிட்சர்லாந்தில் உள்ள பாசில் நகரில் 1897 ஆகஸ்ட் 29 தியோடர் ஹெர்ஸல் என்பர் உலக யூதர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் சீயோன் சங்கத்தை நிறுவினார். இவரே இச்சங்கத்தின் முதல் தலைவர்.

இது ஒருபுறமிருக்க ஆங்கிலப் படைகள் வழியிலேயே சுருண்டு விழ வேண்டுமென்பதற்காக நீர்நிலைகளில் எதிராளிகள் விஷம் கலந்தனர். இதனை அறிந்த ஆங்கிலப்படை எகிப்திலிருந்த நைல் நதியின் தண்ணீரை குழாய் இணைப்பின் மூலம் தாங்கள் முன்னேறுகிற வழிகளிலெல்லாம் எடுத்துச் சென்றனர்.

ஆக, நைல் நதியின் தண்ணீர் ஆங்கில படைகளோடு எருசலேமுக்கு வந்துவிட்டது. துருக்கிய சுல்தான்கள் சொன்னது நினைவிருக்கிறதா? சில வேலைகளில் ஆண்டவரின் பிள்ளைகளைப் பார்த்து சிலர் பரிகாசமாய்ப் பேசுகிற வார்த்தைகளைக் கூட தேவன் கரிசனையாய்க் கேட்டு



தீர்க்கதரிசனத்தைப் போல் நிறைவேற்றுகிறார், என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு அரிய சாட்சியாய் இருக்கிறது.

ஜெனரல் ஆலன்பி ஆங்கிலப் பேரரசனாகிய ஐந்தாம் ஜார்ஜிடம் அழிவைக் கையாளாமல் எருசலேமைப் பிடிக்க ஆலோசனைக் கேட்டார். அவரோ ஆண்டவரிடம் கேள் அவர் நடத்துதலின்படி செய் என்று பதிலளித்துவிட்டார்.

ஆலன்பி அசறவில்லை. ''நான் ஆலன்பி, எருசலேமை மீட்க வந்துள்ளேன் துருக்கியரை ஆதரிப்பதை விட்டு விட்டு அராபிய மக்களே நீங்கள் ஆங்கிலேயரிடம் சரணடையுங்கள்,'' என்று துண்டு நோட்டீசுகளை அச்சிட்டு ஆகாய விமானத்தின் மூலம் எருசலேமுக்குள் தூவி விட்டனர்.

ஆகாய விமானம், அரபி மொழியில் நோட்டீஸ், அல்லாவின் நபி (ஆலன்பி) இவைகளெல்லாம் அரேபியருக்கு மிகப்பெரிய கலக்கத்தை உண்டாக்கிவிட்டது. துருக்கியர் ஓட்டம் கண்டனர், அரேபியர் ஆட்டம் கண்டனர், ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர்.

**பால்பர் விளம்பரம்**

சீயோன் சங்கத்தின் இரண்டாம் தலைவரும் பிரபல வேதியல் அறிஞருமாகிய டாக்டர் கெய்ம் வெய்ஸ்மேன் என்பவரின் வேண்டுகோளுக்கு இணங்க அப்போதைய ஆங்கில அரசின் வெளியுறவு செயலர் ஆர்தர் ஜேம்ஸ் பால்டர் 1917ம் வருடம் நவம்பர் 2-ல் யூத குடியேற்றத்தை குறித்து அறிவித்த உன்னதமான விளம்பரம் இது.

பால்பர் விளம்பரத்தின்படி யூதக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. ஆங்கிலேயர் வசத்திலிருந்த

பாலஸ்தீனாவில் அரேபியரைப் போலவே யூதர்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட்டது. அதாவது அத்திமரம் துளிர்விட ஆரம்பித்தது.

உலகமெங்கிலுமுள்ள யூதர்கள் தாய்நாடு தங்களுக்கு கிடைத்துவிட்டதாகவே மகிழ்ச்சியடைந்தனர். அதே சமயத்தில் வறண்டு போன பாலஸ்தீனாவுக்கு வருவதற்கும் ஐயமுற்றனர். ஆகிலும் உலகின் பல நாடுகளில் அல்லல்பட்ட யூதர்கள் சொந்த நாட்டில் போய் கடைசிக் காலத்தை கழிப்போம் எனவிரும்பினர்.

ரஷ்யா போன்ற நாடுகள் தங்கள் நாட்டை விட்டு வெளியேற யூதர்களுக்கு விதித்திருந்த தடையை தளர்த்தியது. விமானங்கள் மூலம், கப்பல்கள் மூலம், ஒட்டகங்கள், வண்டிகள் மூலம் சாரைசாரையாய் மக்கள் வந்து கொண்டேயிருந்தனர்.

அவர்களின் முதல்வேலை என்ன தெரியுமா? மரங்களை நடுவதுதான். லட்சக்கணக்கான மரங்களை தொடர்ந்து நடவு செய்து வளர்த்தனர். குறைந்த தண்ணீரில் விளைச்சலை உண்டாக்கும் விசேஷித்த விவசாய விநோதங்களைக் கடைபிடித்தனர். அதன்விளைவாய் மரங்கள் வளர்ந்தது. அதனால் மழையின் அளவு கூடியது, மழை கூடியதால் மரங்கள் பூத்துக் குலுங்கியது.

அதாவது, வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போல செழிக்கும் அது மிகுதியாய்ச் செழித்து பூரித்து ஆனந்தக் களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல்சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும் அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள் (ஏசா 35 : 1,2) என்ற வசனம் நிறைவேறத்



துவங்கியது.

டெல் அவிவ் புதிய எருசலேம் போன்ற நகரங்களை நிர்மாணம் செய்தனர். ஆனாலும் இவைகள் யாவும் ஆங்கிலேயரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆளுகையிலிருந்து வெளியே வர பலகட்ட சுதந்திரப் போராட்டத்தை நிகழ்த்தினர். இது ஆங்கிலப் பேரரசுக்கு தலைவலியாய் இருந்தது. அதன் எதிரொலி ஐ.நா. சபை வரை ஒலித்தது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு, யூதக்குடியிருப்பு பகுதிகளை அவர்களுக்கு தனி இராஜ்யமாக வழங்க ஐ.நா. பரிந்துரை செய்தது.

**பறந்து காக்கிற பட்சிகள்**

ஆங்கில படைத்தளபதியாகிய ஜெனரல் ஆலென்பீ எருசலேமை முற்றுகையிட்டு யுத்தமின்றி இரத்தம் சிந்துதலுமின்றி அதை சுதந்தரித்து கொண்டார். இந்த யுத்தத்தின் போதும் யுத்த வெற்றியின் கொண்டாடத்தின் போதும் ஆங்கிலேயரின் போர் விமானங்கள் எருசலேமின் மேல் பறந்து கண்காணித்து கொண்டிருந்தன.

இது ஏசாயா 31 : 5ல் பறந்து காக்கிற பட்சியை போல் எருசலேமுக்கு ஆதரவாயிருப்பேன் என்ற தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகும்.

1948 ஆம் வருஷம் மே மாதம் தங்களின் ஆட்சியை விலக்கிக் கொள்வதற்கு ஆங்கிலப் பேரரசு முன்வந்தது. ஆங்கிலேயர் எவ்வளவுதான் நல்லெண்ணத்தோடு உதவி செய்தவர்களாயிருந்தாலும் நாடுகளைப் பொறுத்தவரை எல்லோரையும் பிரியப்படுத்தவும், பிரிவுப் படுத்தவும் யுத்திகளைக் கையாண்டார்கள்.

உங்களுக்குப் புரிய வேண்டுமென்று இஃதினை எழுதுகிறேன். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டார்கள், ஆனால் 1947ல் நாட்டைவிட்டு வெளியேறும் போது ஒன்றிணைந்த இந்தியாவை, இந்தியா, பாகிஸ்தான் என்று இரண்டு நாடாகப் பிரித்து சுதந்திரம் வழங்கிவிட்டு சென்று விட்டார்கள்.

இதேபோலவே பாலஸ்தீன பூமியையும் முழுவதுமாக யூதருக்கு கொடுக்காமல், அங்கு வாழ்ந்த அரேபியரை பிரியப்படுத்த எண்ணி, பெரும் பகுதியை அரேபியருக்கு பாலஸ்தீனம் என்ற பெயரில் பெரும் நிலப்பகுதியையும், ஒருகுறு நிலப்பகுதியை (55,000 சதுர மைல்) யூதருக்கு சொந்தமானதென்றும் பிரித்து கொடுத்தனர்.

இது யூதருக்கு பெரிய இடியாக இருந்தாலும் வாக்குத்தத்த பூமியை சுதந்தரிப்பதற்கு முதல் அடி என்று எண்ணினர்.

1948 மே 14ல் ஆங்கிலேயருடைய கொடி யூதப்பகுதியின் மேல் பறந்ததை இறக்கி, ஆங்கிலேயர் தங்கள் ஆட்சியை முடித்துக் கொண்டார்கள். அன்றே யூதருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் டேவிட் பென்குரியன் என்ற யூதர் வானொலியில் இன்று தேவன் எங்களுக்குக் கொடுத்த இந்த தேசத்திற்கு **இஸ்ரவேல்** என்று பெயர் பிரகடனம் செய்தார்.

இவரே இஸ்ரவேலின் முதல் பிரதமர். அன்றிரவே அவர்கள் இராஜ்யத்தின் மேல் தாவீதின் கொடி, இஸ்ரவேலின் இராஜ்யத்தின் கொடியாய் ஏற்றப்பட்டது. இஸ்ரவேல் இராஜ்யத்தின் உதயத்தை அறிவிக்கும்படி அந்த நடு இரவிலே யூதப்பாரம்பரியத்தின்படி எக்காளங்கள் ஊதப்பட்டது.

2300 ஆண்டுகளுக்கு முன்பாக பறந்த தாவீதின் கொடி



மீண்டும் பறப்பது எத்தனை ஆச்சரியம், காசுக் கொடுத்தாலும் தரமாட்டேன் என்று துருக்கிய மன்னன் அல்வா கொடுத்தானல்லவா! வாக்குத்தத்தம் பண்ணினவரோ அதை இலவசமாகவே அவர்களுக்குக் கொடுத்தார் என்பது எத்தனை ஆச்சரியம்.

வாசகர்களே! உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், கர்த்தருடைய வாக்குத் தத்தங்களை பரிபூரணமாய் விசுவாசியுங்கள். கர்த்தர் இலவசமாக கொடுக்க நினைக்கும் ஒன்றை காசு கொடுத்து வாங்க முயற்சிக்காதீர்கள். அது வேலையானாலும் சரி, ஆலையானாலும் சரி உங்கள் முகம் பிரகாசமடையும்படி அவர் நிச்சயம் தருவார்.

இஸ்ரவேல் இராஜ்யம் அமைப்பு ரீதியாய் செயல்படத் தொடங்கியது. 1949ல் அதாவது சுதந்திரம் பெற்ற மறுவருடத்தில் 120 பேர் கொண்ட நாடாளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது இஸ்ரவேலின் மக்களவைக்கு நெசட் என்று பெயர். முதல் ஜனாதிபதியாக விடுதலை வாங்கித்தர காரணமாயிருந்த டாக்டர் வைஸ்மேன் தெரிந்தெடுக்கப் பட்டார்.

ஆரம்பம் அவ்வளவு எளிதாக இல்லை. சுற்றியுள்ள அரபு நாடுகளெல்லாம் கொக்கரித்தன. பத்தரை

**இஸ்ரவேலின் தலைநகரம்**

இஸ்ரவேல் நாடு உதயமான போது டெல் - அவிங் என்ற பட்டணம் தலைநகரமாக இருந்தது. ஆனால் பிரதமர் மெனாச்சிம் பிகின் காலத்தில் (1980 ஜீலை 30) எருசலேம் தலைநகரமாக மாற்றப்பட்டது. எல்லா நாட்டு தூதரகங்களும் டெல் - அவிவ்விலிருந்து எருசலேமுக்கு மாற்றப்பட்டன. ஆகிலும் அரபு நாடுகளின் கண்டனத்திற்கு அஞ்சி எல்லா நாடுகளும் தங்கள் தூதரகங்களை டெல் அவிவ்க்கே மாற்றி விட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

மாதத்திலேயே தங்களைச்
சுற்றியுள்ள ஆறு அரபு நாடுகள் மேல் யுத்தமிட்டு, வென்று அவர்களோடு உடன்படிக்கை செய்து அடக்கி வைத்தனர்.

உலகெங்கிலுமுள்ள நாடுகள் இஸ்ரவேல் இராஜ்யத்தை அங்கீகரிக்கத் தொடங்கின. முதலில் குரல் கொடுத்தவர் அமெரிக்க அதிபர் ட்ரூமென் என்பவர். அவரைத் தொடர்ந்து இதுவரை அமெரிக்காவும் அதன் எல்லா அதிபர்களும் இஸ்ரவேலுக்கு பட்சமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய 46 நாடுகள் இஸ்ரவேலை அங்கீகரித்ததினால் ஐ.நா. சபையில் 1949ல் 59 வது நாடாக அங்கம் வகிக்கும் அந்தஸ்தைப் பெற்றது.

அதன்பிறகு எத்தனை யுத்தங்கள், எதிலும் இவர்கள் தோற்கவில்லை. எதிரிகள் எகிறிப் போனார்கள். எல்லைகள் விரிந்து கொண்டே போகிறது. ஆரம்பத்தில் நட்ட மரங்கள், செடிகள் காய்த்து அமோக விளைச்சல்களைத் தருவதினால் உலக நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

இராணுவம், தொழில், அறிவியல், அனைத்திலும் வளர்ந்த நாடுகளைவிட அதிகமாகவே பெலன் கொண்டிருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. தாய் மொழியாகிய எபிரெய மொழி வளர்ச்சி எபிரெய மொழியில் கல்வி, கலாசாலைகள் என ஆதி நிலைக்கு யூத அத்திமரம் திரும்பி விட்டது.

சகோதரரே! யூதர் என்னும் அத்திமரம் துளிர்விட்டு விட்டது. அதில் இளங்கிளைகள் தோன்றிவிட்டது. இவைகள் சம்பவிக்கும் போது அவரது வருகை சமீபம் என்று இயேசு சொன்னதை நினைத்துப் பாருங்கள்.

போனஸாக ஒரு செய்தி! இயேசுக்கிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பிறகு அந்திக் கிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் எருசலேமில் தேவாலயம் இருக்கும் என்று வேதம் சொல்கிறது.



இப்பொழுதோ யூதருக்கு எல்லாம் இருந்தும் தேவாலயம் மாத்திரம் இல்லை. ஆகவே அதைக்கட்ட ஆவலுடனும் அதிவேகத்துடனும் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

சாலமோன் தேவாலயத்தை கட்டினபொழுது அது பணித்தீர்த்து கொண்டு வரப்பட்ட கற்களினால் கட்டப்பட்டதினால் எருசலேமில் சுத்தி, வாச்சு போன்றவற்றின் சத்தம் கேட்கவில்லையென்று வேதம் சொல்கிறது. (1 ராஜா 6 : 7)

இதைப் போலவே எருசலேம் தேவாலயம் கட்டப்பட தேவையான எல்லா வற்றையும் பல்வேறு நாடு களில் செய்து ரெடிமேடாக வைத்திருக் கிறார்கள். நம் நாட்டில் இருந்த ஜி.டி. நாயுடு இருபத்திநான்கு மணி நேரத்தில் அந்தக் காலத்தி லேயே ஒரு வீட்டைக் கட்டி காட்டினது போலவே நவீன யுக்திகளைக் கை யாண்டு பணமும் ஞானமும் படைத்த யூதர்கள் நாட்கணக் கிலேயே தேவாலயத்தைக் கட்டி முடிப்பது சாத்தியமாகும்.

**யுத்தங்கள்**

1948 மே மாதம் முதல் யுத்தம் நடைபெற்றது இது விடுதலை யுத்தம் எனப்படும். 1956 அக்டோபர் 29 எகிப்துடன் யுத்தம். இது சீனாய் யுத்தம் எனப்படும். 1967 ஜுன், எகிப்து ஜோர்டான், சீரியா இதற்கு ஆறு நாட்கள் யுத்தம் என்று பெயர். 1968 ஆகஸ்ட் 7 அரபு நாட்டுடன் யுத்தம் இதற்கு பீரங்கிப் போர் என்று பெயர் 1973- அக்டோபர் யாங் கிப்பூர் யுத்தம்.

சாலமோன் ஆலயம் இருந்த இடத்தில் மசூதி ஒன்று இருப்பதினால் ஆலயத்தைக் கட்டுவது சிக்கல் என்று இதுவரை எண்ணினார்கள். ஆனால் புதிய புதைபொருள் ஆராய்ச்சியின் படி மசூதியை டச் பண்ணாமலேயே நச் சென்று தேவாலயத்தை

கட்ட முடியுமென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க லேவி கோத்திரத்தாரை கண்டுபிடித்து வேறுபிரித்து ஆசாரிய பயிற்சி கொடுத்து வருகிறார்கள். உடன்படிக்கை பெட்டியின் இருப்பிடத்தை கண்டுபிடித்து அதைக் கொண்டு வர ஒப்பந்தம் செய்து ஒழுங்குபடுத்தி உள்ளார்கள்.

பாவ நிவாரணப் பலி செலுத்த தேவையான சிவப்பு ரோமமுள்ள ஆட்டுக்கடா கண்டுபிடிக்கப்பட்டு அது பாதுகாப்பாக வளர்க்கப்பட்டு வருகிறது.

அதாவது அனைத்தும் ஆயத்தமாகிவிட்டது. அத்தி மரம் துளிர்விட்டது, மாத்திர மல்ல, பூக்கவும் ஆரம்பித்து விட்டது. புரிகிறதா உங்க ளுக்கு, புலப்படுகிறதா உண்மை. உங்களுக்கு, புவி ஆசையை விட்டு வெளியே வாருங்கள். புதிய சிருஷ்டி யாய் புதிய மனமுடையவர் களாய் மாறுங்கள். அவர் வருவதை அறிந்தும் புத்தி யில்லாத கன்னிகைகளைப் போல ஆயத்த மில்லாமல் அசதியாய் இருக்காதீர்கள். அவர் வரும் பொழுது ஆயத்தமாய் இருப்பவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். கதவும் அடைக்கப்படும். அதன் பிறகு அழுது புரண்டாலும் அல்லேலூயா போட்டாலும் அநுக்கிரகம் பிறக்காது.

**கேம்ப் டேவிட் ஒப்பந்தம்**

மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சனைகள் சம்பந்தமாக கேம்ப் டேவிட் என்னுமிடத்தில் அமெரிக்கா ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் முன்னிலையில் அரபு நாட்டு அதிபர் அன்வர்அல்சதாத் மற்றும் இஸ்ரவேலிய பிரதமர் மெனாச்சிம் பிகின் ஆகியோ ரிடையே 1978-ல் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இ வ் வி ரு வ ரு க் கு ம் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

# 5

# பத்து விரல் இராஜ்யம்

உலக முழுவதிலுமுள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான முழக்கம். அடுத்து வரப்போவது எங்களுடைய இராஜ்யம் என்று முழங்குகிறார்கள். இப்படிச் சொன்ன எத்தனையோ நாடுகள் உருக்குலைந்து போய்விட்டது.

சோவியத் யூனியன் நம் கண்கூடாக சிதறிப்போனது உண்மை. அமெரிக்காவின் ஆளுகை அதிகாரமும் சரிந்து கொண்டே வருவதும் உண்மை. சூரியன் அஸ்தமனமாகாத அகண்ட இராஜ்யத்தை கொண்டிருந்த ஆங்கிலப் பேரரசு அகல் விளக்காய் சுருங்கிப் போனது உண்மை.

ஆனால் இயேசு கிறிஸ்து திரும்ப இந்த உலகத்திற்கு வருவதற்கு முன்பாக மிக சக்தி வாய்ந்த ஒரு வல்லரசு உலகத்தை ஆளும் என்று வேதம் சொல்கிறது. இன்னும் கூர்ந்து ஆராய்வோமானால் அந்த வல்லரசுத்தருகிற ஒற்றைத் தலைவன் தான் வரப்போகிற அந்திக் கிறிஸ்து என்று வேதம் கூறுகிறது.

ஒரு கடினமான வேதப்பகுதியாக இருந்தாலும் மிக எளிமையாக விளக்க விரும்புகிறேன். நீங்கள் கஷ்டப்படாமல் காரியத்தை மாத்திரம் புரிந்து கொள்ளுங்கள். தேவன் தம்முடைய இரகசியத்தை, வருங்காலத்தை, தீர்க்கதரிசனம், வெளிப்பாடுகள் மூலம் சொல்வது போலவே சொப்பனங்கள், தரிசனம் மூலமாகவே வெளிப்படுத்துகிறார்.

இப்படித்தான் பாபிலோன் என்ற நாட்டை ஆண்ட நேபுகாத் நேச்சார் ஒரு கனவு கண்டார். அது ஒரு சூப்பர் கனவு, அதில் ஒரு அற்புதமான சிலையைக் கண்டார், அது

கற்சிலையுமல்ல, பொற்சிலையுமல்ல. அது வித்தியாசமானதாய் இருந்தது.

தலை தங்கம், மார்பும் கைகளும் வெள்ளி, வயிறு வெண்கலம், கால்கள் இரும்பு, பாதமும் விரல்களும் இரும்பும் களிமண்ணும் சேர்ந்த கலவை வெல்டிங் பண்ணினாங்களா? ஸ்குரு போட்டாங்களா? என்று என்னைக் கேட்கக் கூடாது.

ஆக! அந்த அற்புதமான சிலை நின்று கொண்டிருந்தது. அப்பொழுது வானத்திலிருந்து ஒரு கல் உருண்டு கீழே வந்து சிலையின் கால்விரலின் மீது மோதியது. அவ்வளவு தான்! சிலை தூளாகி பறந்து போயிற்று. ஆனால் அந்தக் கல்லோ, பெரிய மலையைப் போல மாறிவிட்டது. இதுதான் அந்த சொப்பனம். இதைக் குறித்து தானியேல் 2ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம். இந்த அர்த்தத்தைக் கண்டறிய இராஜா மிக அதிகப் பிரயாசப்படுகிறான் அது. ஒரு பெரிய கதை. அதைக் குறித்து விவரமாக தெரிந்து கொள்ள விரும்பினால் நான் எழுதின தானியேல் தீர்க்கதரிசியும், தீர்க்கதரிசனமும் என்ற புத்தகத்தை வாங்கி வாசியுங்கள்.

தேவ ஆவியைப் பெற்ற தானியேல் இந்தக் கனவிற்கான விடையை மிக சுலபமாக சொல்லிவிட்டான். அது கனவு மாத்திரமல்ல சரித்திர முக்கியத்துவம் பெற்ற தீர்க்கதரிசனம். உலக வரலாற்றில் நடந்த, நடக்கிற, நடக்கப் போகிற உண்மை நிகழ்ச்சிகளைக் குறித்த தேவனுடைய வெளிப்பாடு.

“ராஜாவே தங்கம் போன்ற தலை பாபிலோனிய ஆட்சி, உங்க ஆட்சிக்குப் பிறகு வேறொரு பேரரசு வரும் அது வெள்ளி போன்றது. இப்படி மாறி மாறி பேரரசுகள் உலகத்தில் வரும்பொழுது கடவுளின் பேரரசாகிய (கிறிஸ்துவின் வருகை) **கல்** பத்து விரல்களாகிய கூட்டுப் பேரரசின் மேல் மோதி, உலக ஆட்சிகளைக் கவிழ்த்து, தானே இந்த உலகத்தை ஆளும்.



இதுதான் பதிலென்று சொல்லிவிட்டார்”.

நீங்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். “வீடுகட்டினவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத்தலைக் கல்லாயிற்று” என்று இயேசு சொன்னதிலிருந்து “**கல்**” என்பது கிறிஸ்துவைக் குறிக்கும் என்பதையும், அது வானத்திலிருந்து உருண்டு வந்ததென்பது இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கும் என்பதையும் நீங்கள் அறிய வேண்டும்.

குறிப்பாய் ஒன்றைக் கவனியுங்கள். அந்தக்கல் தலையின் மேலோ, மார்பின் மேலோ, இடுப்பின் மேலோ கால்களின் மேலோ, மோதாமல் பாதத்தின் மேலும், பத்து விரலின் மேலும் மோதினதை கருத்தாய் ஆராய வேண்டும்.

அதாவது தங்கமயமான பாபிலோன் ஆட்சிக்காலத்திலு மல்ல, வெள்ளி போன்ற மேதிய பெர்சிய ஆட்சிக் காலத்திலு மல்ல, வெண்கலம் போன்ற கிரேக்க ஆட்சிக்காலத்திலுமல்ல, இரும்பு போன்ற ரோமர் ஆட்சிக் காலத்திலுமல்ல பத்து விரல்கள் போன்ற பத்து நாடுகளின் கூட்டணிப் பேரரசு ஆளும் காலத்தில்தான், கிறிஸ்துவாகிய **கல்** இந்த பூமிக்கு வரும்.

என் வாசகர் திறமைசாலி, பொறுமைசாலி என்று எனக்குத் தெரியும். ஆகவே நான் எழுதுவதை பொறுமையாக படித்துப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த செய்திகளையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதனால் தான் எழுதுகிறேன். நீங்கள் தெரிந்து கொண்டால் பயன் பெறுவது மாத்திரமல்ல, பண்படுவீர்கள் என்றும் நம்புகிறேன்.

பத்து விரல்கள், இரும்பும் களிமண்ணும் சேர்ந்த கலவை என்று சொன்னேன். இரும்பு என்பது ரோமப் பேரரசிற்கு அடையாளமாய் இருப்பதினால் ரோமப் பேரரசிலிருந்து பிரிந்து

போய் உலகம் என்னும் களிமண்ணில் சேர்ந்து கொண்ட (பழைய) பத்துநாடுகள் திரும்ப ஒன்று சேர்ந்து ஆளுவதே இரும்புக் களிமண் கலவையிலான கால்விரல்களின் பொருளாகும்.

நடந்தது என்ன தெரியுமா? இயேசுக்கிறிஸ்து பிறந்த காலத்தில் இருந்த ரோமப் பேரரசுதான் மிகப்பெரிய பேரரசாய் திகழ்ந்தது. அது கி.பி. 364வது ஆண்டில் கிழக்கு ரோம், மேற்கு ரோம் என்று இரண்டு கால்களைப் போல் பிரிந்து விட்டது.

கடைசியில் ஒவ்வொரு காலுக்கும் ஐந்து விரல்கள் இருப்பதுபோல கிழக்கு ரோம் ஐந்து நாடுகளாகவும், மேற்கு ரோம் ஐந்து நாடுகளாகவும் பிரிந்து ஜாதிகளோடு கலந்து போயின.

அதற்கென்ன இப்போ? என்று கேட்காதீர்கள். இனிமேல்தான் விஷயமே இருக்கிறது. இந்த பிரிந்து போன பழைய ரோம பகுதிகள் திரும்ப ஒன்றாக இணைந்து கூட்டணிப் பெற்று பேரரசாக உலகத்தில் சக்திவாய்ந்த மையமாக விளங்கும் போதுதான் இயேசுக் கிறிஸ்துவின் பகிரங்க வருகை இருக்கும்.

அப்படியானால் அந்த நாடுகள் எவைகள்? என்ன செய்து கொண்டிருக்கின்றன? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

| **கிழக்கு ரோம் :** | **மேற்கு ரோம் :** |
|---|---|
| 1. சிரியா | 1. பிரிட்டானியா |
| 2. எகிப்து | 2. பிரான்ஸ் |
| 3. கிரீஸ் | 3. ஸ்பெயின் |
| 4. துருக்கி | 4. இத்தாலி |
| 5. பல்கேரியா | 5. ஆசியா |

எனப் பிரிந்து போயின. அவைகளுக்குள்ளேயும் சிலப் பிரிவுகள் பின்னர் தோன்றின.

இந்த பிரிந்து போன இராஜ்யங்களை ஒரே கொடையின் கீழ் கொண்டுவர பதினெட்டாம் நூற்றாண்டில் பதினான்காம் லூயியும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் நெப்போலியன் போனபாட்டும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வில்லியம் கெய்சர், ஹிட்லர் போன்றோர் முயன்றும் தோற்றுப் போயினர்.



தீர்க்கதரிசன நிறைவேறுதலின் காலம் கனியத் துவங்கின பொழுது காரியங்கள் கனியத் துவங்கியது. ஜெர்மனியும், பிரான்சும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வதினால் தொழில் ரீதியாக ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க ஜெர்மனுக்கும் பிரான்சுக்கும் **ECSC (European Coal And Steel Community)** இடையே உடன்படிக்கையை ஒரு பொருளாதார நிபுணர் உண்டாக்கினார்.

இந்த முயற்சி வெற்றியைக் கண்டது. எனவே 1957ல் ரோமாபுரியில் ஆறுநாடுகள் ஒன்று சேர்ந்து **(Europen Economic Community)** ஐரோப்பிய பொருளாதாரக் கழகம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கியது.

1. பெல்ஜியம்
2. பிரான்சு
3. இத்தாலி
4. லக்ஸ்சம்பர்க்
5. நெதர்லாந்து
6. ஜெர்மனி

ஆகிய ஆறு நாடுகள் சேர்ந்து ஆரம்பித்த இந்த பொருளாதாரக் கழகம் நல்ல வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து வந்த காலக்கட்டங்களில் இன்னும் பலநாடுகள் சேர்ந்து கொண்டன.

வலிமைப் பெற்ற இஃது 1993ல் ஐரோப்பிய யூனியன் என்று பெயரிடப்பட்டது. பொது இராணுவம், நீதித்துறை, பொருளாதாரம் எல்லாவற்றிலும் பெரிய ஒன்றிணைப்பு ஏற்பட்டது. மேலும் ஒற்றுமையையும் பொருளாதார சமச்சீரையும் கொண்டு வர புது நாணய முறையை கொண்டு வரத் திட்டமிட்டு

1.1.2002 முதல் EURO என்கிற பணமதிப்பு ஐரோப்பிய யூனியனில் பயன்படுத்தப்படுகிறது.

இப்பொழுது இங்கிலாந்து, உட்பட இருபத்தைந்து நாடுகள் இந்த ஐரோப்பிய யூனியனில் இணைந்து விட்டன. இஸ்ரேல் விசேஷித்த உறவுப் பெற்றுள்ளது. அதாவது உலகத்திலேயே சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆகிய கூட்டமைப்புகளைவிட மிகப்பெரிய பெலமுள்ள கூட்டமைப்பாக இஃது விளங்குகிறது.

அமெரிக்க டாலர் மதிப்பைவிட யூரோவின் மதிப்பு அதிகம் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது உங்கள் மனதுக்குள் ஒரு கேள்வி எழலாம். பத்துவிரல் என்று சொன்னீர்களே, இப்பொழுது 25 நாடுகள் சேர்ந்திருக்கிறதே பதினைந்து விரல்கள் கூடுதலாய் இருக்கிறதே என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இஃதினை எழுதுகிறேன். பாகிஸ்தான், இந்தியா, வங்காள தேசம் இன்றைய கணக்கின்படி இவைகள் மூன்று நாடுகள். ஆனால் 75 ஆண்டுகளுக்கு முன் கணக்கிட்டுப் பார்த்தால் அது ஒரே நாடுதான்.

இதைப் போலவே ஐரோப்பிய யூனியனில் உள்ள 25 நாடுகள் என்பது எண்ணிக்கையின்படி பார்க்கப்படாமல் அவைகள் பூர்வாங்க ரோமப் பேரரசின் சிதறல்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் சில நாடுகள் ரோமப் பேரரசில் இல்லையே என்று நீங்கள் கேட்கலாம்.

இரும்பும் களிமண்ணும் என்பது, ரோமப் பேரரசு மற்ற ஜாதிகளுடன் கலப்பதையே குறிக்கிறது அல்லவா! எனவே இந்தக் கூட்டணியில் சில களிமண்ணும் கலப்பது இயற்கைதானே!

இப்படிப்பட்ட வலுவான இராஜ்யம் வல்லரசாக எழும்பி வருகிற காலக்கட்டத்தில் அதிமுக்கிய இரண்டு காரியம் நடைபெறப்



போகிறது. இந்த வல்லமையான பேரரசுகளிலிருந்து தான் அந்திக் கிறிஸ்து எழும்பப் போகிறார்.

அந்த அந்திக்கிறிஸ்து எழும்பும்போது முழு உலகமும் அவன் தலைமையை ஏற்றுக் கொள்வது மாத்திரமல்ல அவனுடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்.

இன்றைக்கு இருக்கிற அறிவியல் உலகில் அதிநவீன கண்டுபிடிப்புகளாகிய செயற்கைக் கோள், கம்ப்யூட்டர், இணையதளம் ஆகியவற்றுடன் உலகத்தில் மிகப்பெரிய நிதிக்குவியலாயிருக்கிற ஐரோப்பிய ஐக்கியத்தின் பொருளாதாரமும் வங்கித்துறையும் உதவி செய்யும்.

தமிழ்நாட்டில் அழகாக ஓடுகிற பல அரசுப் பேருந்துகளும், அரசு சார்பில் கட்டப்படுகிற சில அடுக்கு மாடிக்கட்டிடங்களும், ஐரோப்பிய பொருளாதார கழகத்திற்கு சொந்தமான வங்கியில் வாங்கப்பட்ட கடனிலிருந்து வந்தவைகள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே அந்திக் கிறிஸ்து எழும்புகிறபொழுது இந்தியா உட்பட ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொரு விதமான நெருக்கடியினிமித்தம், அந்திக் கிறிஸ்துவின் தலைமைத் துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும். 30.9.2008ல் பாரத பிரதமர் பிரான்சுக்கு சென்று ஐரோப்பிய கழகத்தைச் சார்ந்த பிரான்சுடன் அணு எரி பொருளுக்கான ஒப்பந்த பேச்சு வார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட உச்சக்கட்ட நேரத்தில்தான் கைகளால் பெயர்க்கப்படாத கல்லாகிய கிறிஸ்து இயேசு (தானி 2 : 24) பூமிக்கு வருவார். அத்துடன் உலகத்தில் மனிதப் பேரரசுகளில் ஆட்சிக்கு முடிவுவரும்.

அந்தக்கல் பெரிய பர்வதமாகி பூமியை நிரப்பினது

போலவே கிறிஸ்து தனது 1000 வருட ஆட்சியை பூமியிலே ஸ்தாபனம் பண்ணுவார்.

**கடைசியாக பிரியமானவர்களே :-** அந்திக் கிறிஸ்து எழும்புவதற்கு முன்பாகவே கிறிஸ்துவின் வருகை இருக்கும். அப்பொழுது அவருடைய சபை எடுத்துக் கொள்ளப்படும். அந்தக் கூட்டத்தில் நீங்களும் ஒருவராக இருக்க வேண்டும். அந்த வாய்ப்பை தவறவிடுவீர்களாயின் அந்திக் கிறிஸ்துவின் கோர ஆட்சியை நீங்கள் சந்திக்க வேண்டியதிருக்கும்.

**காலம் இனி செல்லாது**

கவனமாயிருங்கள்! அவரின் வருகையின் அடையாளங்களாக இயேசு சொன்ன அத்தனையும் நிறைவேறிவிட்டது. இனி நிறைவேற வேண்டியவைகள் என்று ஒன்றும் கிடையாது. இன்றோ நாளையோ கூட அவரின் வருகை இருக்கலாம்.

அடையாளங்கள் நிறைவேறிவிட்டதே. பின்னே ஏன் அவர் வரவில்லை? என்று நீங்கள் ஆதங்கப்படுவது எனக்குப் புரிகிறது. அவர் தாமதிப்பதற்கு, “நாம் மனந்திரும்ப வேண்டும் என்று நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார்”. (IIபேதுரு 3 : 9) என்ற ஒரு காரணத்தை தவிர வேறு காரணமில்லை.

- ★ அறிவு பெருகி ஆராய்ச்சிகள் வளர்ந்து விட்டது.
- ★ அகிலத்திற்குள், அடையாளங்கள் நிறைவேறி விட்டது.
- ★ அத்திமரம் துளிர்விட்டு கிளைவிட்டு விட்டது.
- ★ அதிகாரமுள்ள 10விரல் இராஜ்ஜியம் எழும்பி விட்டது.

அன்புக்குரியவர்களே! ஆயத்தப்படுங்கள்! அனலாய் இருங்கள், மனந்திரும்புங்கள்! மறுரூபப்படுங்கள்!

மார நாதா – இயேசு வருகிறார்.

## நன்றி! நன்றி! நன்றி !

இந்த இனிய நூலை நான் எழுதுவதற்கான சில அறிய குறிப்புகளை பெறுவதற்கு கீழ்க்கண்ட புத்தகங்களும், இணையத்தளங்களும், பெரும் உதவியாக இருந்தன. அவைகளின் ஆசிரியர்கள் மற்றும் வெளியீட்டார்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. NOW AND THE NEAR FUTURE PROPHESIED - BY - DON E. Stanton
2. ILLUSTRATED FAMILY ENCYCLOPEDIA
3. The Second Coming of JESUS CHRIST By REV.DR. JOB GNANAPRAKASAM
4. www.wikipedia.org
5. www.digiwis.com
6. www.history learningsite.co.uk

## வாங்கி வாசியுங்கள்

கடைசிக்கால சம்பவங்களைக் குறித்து இதே ஆசிரியர் எழுதிய கீழ்க்கண்ட புத்தகங்களை வாசித்து பயன் பெறுங்கள்.

1. இயேசுவின் வருகை எங்கே? எப்போது? எப்படி?

2. இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை.

3. இயேசு கிறிஸ்துவும் அந்திக் கிறிஸ்துவும்

4. முதலாம் உயிர்த்தெழுதலும் ஆயிரவருட அரசாட்சியும்

5. தானியேல் தீர்க்கதரிசியும், தீர்க்கதரிசனமும்

6. காலங்களும் யுகங்களும்



## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,
**Pr. அலெக்ஸ் தினகரன்**